egistered No. M. 2330 'SIDDHANTHAM
ACC-NO-33772 Vol. 24-No. 9

சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

மலர் 24 | கர புரட்டாசி 1951 செப்டம்பர் | இதழ் 9

உள்ளுறை பக்கம்

பத்திராசிரியர் : சி. எம். இராமச்சந்திரன் செட்டியார், பி.ஏ., பி.எல்.
உதவிப் பத்திராசிரியர் : வித்வான் - வை. குஞ்சிதபாதம் பிள்ளை
சைவ சித்தாந்த மகா சமாஜம்
40, முத்தையா முதலி தெரு, வேளாளதேனாம்பேட்டை, சென்னை-6

செய்தித் திரட்டு

4-5-51—சைதாப்பேட்டை திருவள்ளுவர் செந்தமிழ் சிவநெறிக் கழகம் ஐந்தாம் ஆண்டு நிறைவுவிழா :—திரு வள்ளுவர் அகம் பாசி. இராமநாதம் பிள்ளை அவர்கள் தலைமையில் வீதிச் சொற்பொழிவுகளும் திரு. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் தலைமையில் பொதுக்கூட்டமும் நடந்தன. பல பெரியார்கள் விரிவுரைகள் ஆற்றினார்கள்.

9-8-51—திருவெண்ணெய்நல்லூரில் சமாஜக் கூட்டம் நடந்தது. விவரங்கள் நாட்டு ஒலியில் காண்க.

10-8-51—மலைநாட்டுத் திருவஞ்சைக் களத்தில் சுந்தர மூர்த்திகள், சேரமான் பெருமாள், திருநாட்கள் நடைபெற்றன. சேக்கிழார் திருக்கூட்டத்தார் பெரும் பங்கு எடுத்துக் கொண்டார்கள். எப்போதைப் போலவே திருப்பனந்தாள் ஆதீனகர்த்தர் மாகேசுவர பூஜை நடத்தி வைத்தார்கள். ஆலயத்திலும் உயர்தரப் பள்ளியிலும் கூட்டங்கள் நடைபெற்றன. தேவாரப் பரிசு ஒரு மாணவனுக்குத் தரப்பட்டது. மேலும் திருப்பனந்தாள் ஆதீனத்தார் சேரமான்பெருமாள் வாசகசாலை நிறுவுவதற்காக 5000 ரூபாய் தந்துள்ளார்கள். இந்தத் தொண்டு மிகவும் புனிதமானது. தென்னாடு முழுதும் அன்னாருக்குக் கடமைப்பட்டுள்ளது.

10, 11, 12-8-51—ஆர்க்காடு ஸ்ரீசுந்தரர் நிலையத்தில், சுந்தர மூர்த்திகள் திருநாள் கண்ணன் திருச்சபையாரால் நடைபெற்றது. அச்சபையின் 25வது ஆண்டு விழாவும் நடைபெற்றது. வல்லம் வைத்திலிங்கம் பிள்ளை அவர்கள் தலைமையிலும் சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் தலைமையிலும் நடந்தன.

12-8-51—இருகூர் திருவள்ளுவர் இலக்கியக் கழகம் தொடக்க விழா நடைபெற்றது. இரண்டு தமிழ் ஆசிரியர்கள் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள்.

12-8-51—தென்குரங்காடுதுறை ஆடுதுறை யப்பர் அருள்நெறிக் கழகத்து மூன்றாம் ஆண்டு நிறைவுவிழா நடைபெற்றது. பல பெரியார்கள் சொற்பொழிவுகளை நிகழ்த்தினார்கள்.

Reg. M. 2330

உ

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.

மலர் 24 | கர புரட்டாசி 1951 செப்டம்பர் | இதழ் 9

நாட்டு ஒலி

1. தலைமைசான்ற புனிதம் :—செந்தமிழ் நாட்டிலே தெய்வத் தமிழ் மணக்கும் தலங்களிலே புனிதம் ஓங்கி மிளிர்ந்து நிற்கும். அப் புனிதம் புகழ்பெற்ற சைவக் குரவர்கள் அடிதோய்ந்ததினால் உண்டாகப் பெற்றது. மேலும், தெய்வத் தமிழ் மலர்ந்ததினால் அது பெருகியது. அப்படிப்பட்ட தலங்களுள் அக் குரவர்கள் திருவருள் பெற்ற இடங்களோ நம்மால் கூற இயலாத் தெய்வீகம் பெற்றவை. அவ்வாறான புனிதத் தலங்கள் தமிழ்நாட்டில் நான்கு உண்டு. அவைகளில் இரண்டு நடு நாட்டகத்தே உள்ளன. அப்பெருமையால் அந் நாடு செய்த தவப்பயனை என்ன என்று உரைப்பது. அவ் விரு தலங்களில் மேற்கே பெண்ணை நதியின் தென் பாகத்தில் அமைந்துள்ளது வெண்ணெய் நல்லூர் ஆகும். இத்தலம் திருவருள் தந்த தலமாகும். இதன் திருக்கோயிலுக்கும் திருவருள்துறை என்ற திருப்பெயர் உற்று இருப்பது நோக்கத் தக்கது. இத் தலத்தை எவர் காணச் சென்றாலும் அதன் செழிப்பைக் கூறச் சலியார். பெரிய எடாரியின் இடையில் செழிப்பான நல்லூற்று நிலம் இருத்தல் போல சுற்றிலும் கண்ணை எரிக்கும் கரிசல் நிலங்களின் இடையில் செழிப்பான நன்செய் நிலங்கள் இருக்கும் பெருமை இத் தலத்திற்கு உண்டு. மேலும் இவ்வூருக்கு வடபால் மணல் ஆறு ஓடுகின்றது.

ஆழத் தோண்டினல் அன்றித் தண்ணீர் வாாது. ஆண்டில் பெரும் பாகமும் அவ்வாறு வெள்ளத்தைக் கண்டது இல்லை. ஆற்றின் பரந்த மணல் வெயிலின் கொடுமையை அதிகரிக்கின்றது. இப்படிப் பட்ட கொடிய நிலத்தின் இடையே செழிப்பான நன்செய்கள் இருப்பதைக் கண்டால் அந்நன்செய்களின் செழிப்பு பன்மடங்கு ஏறுகின்றது. இப்படிப்பட்ட நீர்ச் செழிப்பும் நிலச் செழிப்பும் கொண்டு உள்ளது இந்தத் தலம். ஊரைச் சுற்றிலும் வயல்கள் உண்டு. அவைகளில் கேணிகள் இருக்கின்றன. கேணிகளிலிருந்து தூய்மையான நன்னீர் இறைக்கப் படுகின்றது. அந்நீரினல் விளைவது நெல்லும், கரும்பும். குழாயில் நீர்விழுவது அருவிபோல் இருக்கும். விடியலில் இக்குழாய் நீரில் நீராடிவிட்டுத்தான் மக்கள் ஆராதனைக்குச் செல்லுவார்கள். ஊருக்கு மேற்பால் பெருங் குளம் இருந்தும் அதில் நீர் இருப்பதில்லை. குளத்தில் நீர் வற்றியிருந்தும் கேணிகளில் வற்றுவதில்லை. ‘எடுத்தாலும் ஊறும், இறைத்தாலும் ஊறும், இடை நடுவே தடுத்தால் தடைபடுமோ மணற் கேணித் தண்ணீர் ?’ என்பது போல இவ்வூர்க் கேணிகள் எப்போதும் வற்றுவது இல்லை. விளைவும் குறைவது இல்லை. அடுத்து இருக்கும் மலட்டாற்றில் மண்டைக் கிணறுகள் தோண்டி வடிகால்கள் கட்டி அடுத்த ஊர்களுக்குத் தண்ணீர் கொண்டு செல்லுவார்கள். இவ்வாறு மலட்டாற்றின் தண்ணீரால் பாய்ந்து வரும் செழிப்புள்ள ஊர்கள் இரண்டு இருபக்கமும் உண்டு. அவை இரண்டும் பாடல் பெற்ற தலங்களே. மேற்கே இடையாறும் கிழக்கே முண்டீச்சரமும் அமையப் பெற்ற பெருமை வாய்ந்தது இந்தத் தலமாகும். உலகச் செழிப்போடு ஆன்மிகச் செழிப்பும் இந்தத் தலம் பெற்று இருக்கிறது என்ருல் இதை விடச் சிறந்த தலம் யாது உள்ளது ?

2. ஆன்மிகப் பெருமை :—‘ உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே ’ என்ருர் ஆன்ருேர். ஔவையாரும் ‘ நாடு என்பது மேடும் பள்ளமும் அல்ல ; அதில் வசிக்கும் மக்களில் சார்ந்தது ’ என்ருர். ஆகவே தலத்தின் பெருமை

அதைச் சுற்றிலுமுள்ள நீர்ச் செழிப்பாலும் நிலச் செழிப்பாலும் ஏற்படுவது என்பது ஒருபுறம் இருக்க, அங்கு வசிக்கும் மக்களின் ஆன்மிக உயர்வால் ஏற்றம் அடைந்திருக்கும் என்க. இத் தலத்தின் பெருமை இன்றைக்கு 11 நூற்றுண்டுகளுக்குமுன் ஏற்பட்ட ஆன்மிக வெற்றியால் தோன்றியது. வைதிகச் செழிப்பிலும் அரசியல் ஆதரவிலும் சிறப்புற்றிருந்தார் ஒரு பெரியார். படிப்பிலும் பண்பாட்டிலும் மேம்பட்ட நிலையில் இருந்தார். தக்க வயது வந்த போது தக்க இடத்தில் திருமணப் பேச்சு நடந்தது. திருமணத்திற்கு உறவினரும் அன்பர்களும் திரளாகக் கூடியிருந்தனர். மணச்சடங்குகள் நடந்து கொண்டிருந்தன. அந்த விழுமிய பொழுதில் தோன்றினர் ஒரு முதியவர். கையில் ஒரு ஓலை எடுத்து வந்து வம்பு செய்தார். 'அடிமை ஒருவன் தலைவன் ஆணையின்றி எச்செயலும் செயலாகாது. இவனே என் அடிமை; என் சம்மதியின்றித் திருமணம் செய்ய முயல்கிறுன்; அது நிறுத்தப்பட வேண்டும்' என்று வம்பு பேசினர். மணமகனே அச் சொற்களை மறுத்தான். ஆனுல் முதியவர் இடம் தரவில்லை. ஊர்ச் சபையார் முன் வழக்குத் தீர்க்கவேண்டும் என்று வற்புறுத்தினர். ஊர்ச் சபையார் கேட்டனர். படியோலை, மூலஓலை முதலிய சான்றுகளோடு முதியவர் தன் வழக்கை நிரூபித்தார். மணமகனர் விம்மிதம் அடைந்தார். யாது ஆணை எனக் கேட்டார். முதியவர் மணமகனரை அழைத்துக் கொண்டு அந்தத் தலத்து ஆலயமாகிய திருவருள் துறைக்குச் சென்றுர். அங்கே உட்சென்ற முதியவர் மறைந்தார். மணமகனரோ அது திருவருள் செயல் என அறிந்து இறைவனை வழுத்தத் தொடங்கினர். தடுத்தாட் கொண்ட இறைவன் அருள் புரிந்தார். என்ன செய்வது என்று கேட்க 'என் பணி செய்க, என்னைப் பாடுக, என்னைத் தமிழால் அர்ச்சனை செய்க' என்ற கட்டளைகள் பிறந்தன. அது முதல் ஆளுடைய நம்பிகள் இறைபணியில் நின்றுர். ஆன்மிக வெற்றி ஏற்பட்டது. வழக்கு வென்ற இடம் வழக்கு வென்ற அம்பலம் ஆயிற்று. திருவருள் துறையில் குரு

அருள் கிடைத்தது. இதுவே இந்தத் தலத்தில் தோன்றிய ஆன்மிகப் பெருமை. இப் பெருமையை ஒட்டிப் பின்னர் பல பெருமைகளும் தோன்றின. சடையப்பவள்ளலாரின் ஆதரவில் கம்பர் இராமாவதாரம் பாடினர். மெய் கண்ட தேவர் சிவஞான போதத்தை அருள் செய்தார். மக்களின் உயர்வை இந்தத் தலம் காட்டிற்று. லௌகிக உயர்வைக் காட்டிலும் ஆன்மிக உயர்வே சிறந்தது என்று இந்தத்தலம் நிரூபித்தது.

3. சமயப்பேரியார் உள்ளப்பான்மை :—அப்படிப் பட்ட அருமைத் தலத்தில் சைவப் பெரியார்கள் சமயகுர வரின் மேன்மையை ஆராய்ந்தார்கள். இத் தலத்திற்கு உரிமையாளராகப் பல்லாண்டுகள் உழைத்த ரெட்டியார் அவர் களின் மணிவிழாவை ஒட்டி இவ்வாராய்ச்சி நடைபெற்றது. ஆடிமாதம் சுவாதித் திருநாள் ஆளுடைய நம்பிகளின் பெருமை பெற்ற திருநாள் ஆகும். அன்று காலை சைவப் பெரு மக்கள் கோயில் வழிபாடு செய்து திருவருள் துறை யில் அழகிய மண்டபத்தில் கூடினர்கள். தேவாரம் ஓதப் பெற்றது. சமாஜச் செயலாளர் முன்னுரை பகர்ந்து இவ் வாண்டு சமாஜத் தலைவர் திரு. சச்சிதானந்தம் பிள்ளை அவர்களைத் தலைமை வகிக்கும்படி கேட்டுக் கொண்டார்கள். அவர்கள் தம் முன்னுரையில் கடவுள் வாழ்த்தை உரை நடையாக சொல்லத் தொடங்கி பிறகு சமய வாழ்க்கை இன்னது என்று தெளிவாக உரைத்தார்கள். 'வழக்கு வென்ற அம்பலம் மாசுபடிந்துள்ளது. ஆனல் திருவருள் துறையோ இன்னும் அருள் துறையாக இருக்கிறது. ஆகவே இங்கு கூடினேம். சுந்தரர் திருநாள் அன்று சுந்தரர் தடுத்து ஆட்கொண்ட செய்தியை நினைப்பூட்டுகிறேம். அவருடைய வழக்கு உலக வழக்காக உள்ளது. திருவருள் துறையில் அன்னர் வாதாடிய குரல் இன்றும் என்றும் கேட்கப்படும். தகுதியுள்ளார் கேட்பார்கள்' என்று கூறித் தம் முன் னுரையை முடித்தார்கள். பிறகு நான்கு அரிய பேச்சுக்கள் நிகழ்ந்தன. அவற்றில் முதலில் பேசியவர் மருத்துவர் தேவ ராயர். இந்திரியங்களை வெல்வது தவம் ஆகும். இந்திரி

யங்களை வென்று ஒரு மணத்திற்கு இருமணம் பூண்டும் தவத்துறையில் இருந்தார் ஆளுடைய நம்பிகள். அவருடைய வாழ்வு யோகநெறிக்கு ஓர் எடுத்துக் காட்டு ஆகும். தேவாரத்திலும், திருமந்திரத்திலும் இதற்குச் சான்றுகள் கிடைக்கின்றன. முரணாகத் தோன்றும் வாழ்வு முரண் அல்ல என்று அறிய வேண்டும் என்று அவர் கூறினார்.

இரண்டாவதாகப் பேசியவர் ஆசிரியர் சாமிநாதனார். தமிழ்நாட்டின் ஐந்து, ஆறு நூற்றாண்டுச் சரித்திரத்திற்குத் திருத்தொண்டத் தொகை அருளிச்செய்த வகையில் ஆளுடைய நம்பிகள் அடிகோலினார். மானிட வாழ்க்கையின் போக்குக்கு அவர் வாழ்வு ஒரு குறிக்கோள் ஆகும். பிழைபடினும் மன்னிப்புக் கிடைக்கும். ஆலயம் தொழுதற்குச் சாலவுமடிகோலினார் என்றார். மூன்றாவதாகப் பேசியவர் ஆதிலட்சுமி அம்மையார். அந்தணர் பிறப்பும் அரசன் வளர்ப்பும் இரண்டும் பெற்றும் இறுமாப்புக் கொண்டிலர் ஆளுடைய நம்பியார். இறைவனை வழிபடுவதற்கு அவனுடைய அருள் துறை புகவேண்டும். அவருக்கு ஆண்டவன் இட்ட ஆணை 'வித்தகம் வேண்டாம். பணிசெய்' என்பதே. தூரிசுகள் செய்வது மானிட இயற்கை. அதனைச் செய்யில் தண்டனை கிடைக்கும். மன்னிப்பு வேண்டில் மன்னிப்புக் கிடைக்கும். அதனால் அருள் துறைக்கு வழி கிட்டும். தற்பொழுது மனிதனுக்கு வரும் கஷ்டம் தேவைகளை அதிகரித்துக் கொண்டதே. குறைத்துக் கொள்ளின் வாழ்வில் நன்மை வரும். இல்லறம் நல்லறம் ஆகும். நம்பிகள் வாழ்வில் இதனைக் காண்கிறோம். எதனை விரும்பினும் இறைவனை நாடுதல் இன்றியமையாதது என்றார் நான்காவதாகப் பேசியவர் மயிலை இளமுருகனார். நம்பிகள் வைதீக உரு லௌகீக உரு இரண்டையும் ஒரு சேரப்பெற்றவர். அவரது திருமணம் மிகச் சிறந்தபொருள் கொண்டது. ஓலையைக் கொண்டு தடுத்தாட்கொண்டது என்? சம்பந்தருக்குப் பொற்கிண்ணம், அப்பருக்கு சமண்புகுகை, வாதவூராருக்குக் குதிரை விளையாட்டு இவைகளைக் கொண்டு ஆட்கொண்டது என்? இறைவனுக்கு

எவரை எதனால் ஆட்கொள்வது என்பது தெரியும். அதைத் தான் ' ஏதுக்களால் ஆராய வேண்டாம் ' என்று கூறப் பட்டது. ' அருச்சனை பாட்டே யாகும் நற்றமிழ் பாடுக ' என்ற இறைவன் வாக்கு நம்பிகளுக்கு மட்டும் அல்ல, தமிழ் மக்கள் எல்லாருக்குமே என்க. இறைவன் குற்றம் செய்தாலும் பொறுத்தருளுவன் என்றார்.

முடிப்புரையில் தலைவர் அவர்கள் யோக நெறிக்குத் ' தேடுவன் தேடுவன் ' என்ற திருவாமத்தூர்த் தேவாரத் தைச் சான்று காட்டினார். பச்சாத்தாபத்தால் மன்னிப்புக் கிடைக்கும் என்பது விவிலியற்கு மட்டு மல்ல, சைவர்களுக் கும் உண்டு. ' பணி செய்க ' என்பதன் அடிப்படை ஒன்றே. 'காலத்துக் கேற்றபடி அது மாறும். அறக்காப் பிற்குக் கிளர்ச்சி வேண்டும். சமயச் சபைகள் அதனை மேற் கொள்ளலாம். கோயில் வழிபாடு கூட்டு வழிபாடு தலவழி பாடு இவைகள் வேண்டும். மானுட வாழ்க்கைக்குத் தேவாரம் ஒரு வழிகாட்டி என்பனபோன்ற அரிய கருத்துக்களை எடுத் துரைத்தார்கள்.

4. சமயப் பேச்சுக்கள் :— பிற்பகல் சமயக் கூட்டம் நடைபெற்றது. அதற்கு இடையில் காந்தி நினைவு உயர்தரக் கல்விச் சாலையில் ஓர் அரிய நிகழ்ச்சி நடைபெற்றது. அக் கல்விச்சாலை ஆற்றின் தென்புறத்தில் சாலை ஓரமாக ஓர் அமைதியான இடத்தில் அமைக்கப் பட்டுள்ளது. ஆணும் பெண்ணுமாக 425 பிள்ளைகளைக் கொண்டது. அண்மையில் ஏற்பட்ட நிலயமான போதிலும் அரசியல் பரீட்சையில் இவ் வட்டத்திலே முதன்மையாக வெற்றி பெற்றிருக்கின்றது. ஆசிரியர்கள் விருப்பப்படி சித்தாந்த ஆசிரியர் தலைமை வகிக்க, சுவாமிநாதனார் மாணவர்களுக்கு ஏற்றபடி ஒரு அரிய சொற்பொழிவு நிகழ்த்தினார். மருதூர் கிழார் அத னைத் தொடர்ந்து பேசினார். பிள்ளைகள் அமைதியாகவும் ஊக்கத்துடனும் கேட்டார்கள். இச்சாலையைச் சிறப்புற நடத்துகின்றவர் ரெட்டியார் என்று அறியவேண்டும்.

மாலை ஐந்து மணிக்குச் சமயக் கூட்டம் கூடிற்று. பழைய முதலமைச்சர் ஓமந்தூரார் தலைமையில் சிறப்பாக

நடை பெற்றது. முன்னுரையில் தற்போது மக்களிடை சமய உணர்ச்சி குறைந்திருப்பதும், அதை எவ்வாறு மீண்டும் சிறந்த நிலைமைக்குக் கொண்டுவர வேண்டும் என்பதும், தற்கால அரசியல் போக்கின் ஒழுங்கீனங்களைப் பெருமக்கள் எவ்வாறு நீக்கவேண்டும் என்றும் அதனுல் சமரசசன்மார்க்கத்தை எவ்வாறு நிலைநிறுத்த வேண்டும் என்றும் கூறினுர். மயிலை கிழார் அவர்கள் சைவசமயத்தை நிலைநாட்டுவதற்கு மக்கள்செய்யவேண்டிய பணிவிடைகளை எடுத்துக் கூறி மணிவிழாத் தலைவர் எவ்வாறு அதனை நடைமுறையில் கொண்டு வந்திருக்கிருர் என்பதையும் விரித்துக் கூறினுர். சித்தாந்த ஆசிரியர் அதற்குப் பின் பேசியதில் அண்மையிலே அரசியலார் அறிக்கையில் கண்ட புள்ளி விவரங்களை எடுத்துக் காட்டி சமய நிலைய நிர்வாகம் எவ்வாறு கடைமைகளைச் செய்யவில்லை, இனி என்ன செய்ய வேண்டும் என்பவைகளை விரித்துக் கூறினுர். சமாஜத் தலைவர் பிள்ளை அவர்கள் 'ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்று இரு' என்ற பட்டினத்தார் பாடலைப் பெருக்கிக் கூறினுர். மருத்துவர் தேவாயனுர் திருமந்திரத்தில் இருந்து சமய உண்மைகளை எடுத்துக் கூறினுர். திருமந்திரமும் சித்த வைத்தியமும் எவ்வாறு ஒன்று பட்டுள்ளது என்று கூறின விளக்கம் மிகவும் அருமையாக இருந்தது. பிறகு சாமிநாதனுர் அவர்களும் காஞ்சி நண்பர் ஒருவரும் பல அரிய பொருள்களைக் கூறினுர்கள். இறுதியில் தலைவர் அவர்கள் தற்காலத்திற்கேற்றபடி சமய முன்னேற்றத்திற்குச் செய்யவேண்டிய செயல்கள் எவை எவை என்று விவரமாகக் கூறி முடித்தார்கள். சமாஜச் செயலாளர் நன்றிகூறக் கூட்டம் தேவார இன்னிசையோடு முடிவு பெற்றது. சமாஜத்தின் திங்கட் கூட்டங்கள் இடையில் நின்றுபோய் மீண்டும் தொடங்கியது போற்றத் தக்கதாகும். வெண்ணெய்நல்லூர் ரெட்டியார் அவர்களின் வள்ளல் பண்புகளினுல் சமாஜத்தின் திங்கட் கூட்டம் தொடங்கியது. இனி மேலும் ஆங்காங்கே செவ்வையாய் நடைபெறும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. இந்தச் சமயத்தில் ரெட்டியார் அவர்கள் சமாஜக் கூட்டங்களுக்கு

இயற்றிய பேருதவி மறக்கப்பாலது அன்று. திருவெண்ணெய்நல்லூரில் ஞானியார் தலைமையில் நடந்த சமாஜ ஆண்டு கூட்டத்திற்கும் திரு அதிகையில் திரு. வி. கல்யாணசுந்தர முதலியார் அவர்கள் தலைமையில் நடந்த சமாஜக் கூட்டத்திற்கும் ரெட்டியார் அவர்களின் பேருதவி எழுத்தில் அடங்காதது. அவைகளைப் போலவே இந்தத் திங்கட் கூட்டமும் நடைபெற்றதுஎன்று அன்பர்கள் அறியவேண்டும்.

5. மணிவிழாச் சிறப்பு .— அடுத்தநாள் காலையில் அன்பர் திருக்கூட்டம் கோயிலை வலம் செய்து கொண்டு வந்து திருவருள் துறையில் கடவுள் வழிபாடு நடத்திற்று. மணிவிழாத் தலைவரும் தலைவியும் உறவினர் நண்பர் முதலியோர் புடை சூழ ஒவ்வொரு திருமூர்த்தியின் முன்னரும் வழிபாடு செய்தார்கள். தடுத்தாட்கொண்ட நாதருக்குச் செவ்விய முறையில் அர்ச்சனை, ஆராதனைகள் நடைபெற்றன. நம்பிகளுக்கு வழிபாடு நடந்தது. அம்பிகைக்குத் தீப ஆராதனை நடந்ததும், முன் மண்டபத்தில் மணி விழாத் தலைவருக்கும் தலைவிக்கும் விழாச்சடங்குகள் நடைபெற்றன. சென்னை ஓதுவார் சிங்காரவேலு அவர்கள் திருமுறை ஓதினார்கள். பிறகு மெய்கண்டார்மடாலயத்தில் ஆராதனை நடைபெற்றது. மணிவிழாத் தலைவர் தலைவியர்க்கு உறவினர்கள் அடிபணிவு நடத்தினார்கள். பெரியோர்கள் ஆசி கூறினார்கள்.

விழாத்தலைவர் மாளிகையில் அவரது திருவுருவப் படத்தை மயிலை கிழார் இளமுருகனார்திறந்து வைத்தார்கள். அவருடைய வாழ்க்கையைப் பற்றி வெகு அருமையாகப் பேசிப் பாராட்டினார்கள். திருவுருவப் படம் உண்மையாகத் தீட்டப்பட்டிருந்தது. பூமாலை சூட்டப்பட்டு அழகு படுத்தப்பட்டிருந்தது. மின்விளக்குகள் பிரபையாக அமைக்கப் பட்டிருந்தன. படத்தின் தோற்றம் அழகுக்கு எடுத்துக்காட்டாக இருந்தது.

விழாத் தலைவரின் ஆணையில் உள்ள உயர்தரப் பாடசாலையில் ஒரு பாராட்டுக் கூட்டம் நிகழ்ந்தது. சமாஜச் செயலாளர் அரங்கசாமி அவர்கள் தலைமை வகித்தார்கள்.

பாடசாலை ஆசிரியர்கள் மிக அன்போடு பாராட்டுரைகளை அள்ளித் தந்தார்கள். நடுப்பகலில் பெரும்விருந்து நடத்தப் பட்டது. வந்த அன்பர்களுக்கே யன்றி ஏழைமக்களுக் கும் நல்விருந்து அளிக்கப்பட்டது. மணிவிழா அன்பளிப் பாக முருகன்முந்நூல் முதலிய அருமையான சிறுநூல்கள் வந்த அன்பர்களுக்கெல்லாம் கொடுக்கப்பட்டன.

6. பாராட்டுக் கூட்டம் :— பிற்பகல் 5 மணிக்குப் பாராட்டுக்கூட்டம் நடைபெற்றது. சித்தாந்த ஆசிரியர் தலைமை வகித்தார். தமிழ்நாட்டு சங்கத்தார்கள் பலரும் தனி அன்பர்கள் பலரும் வாழ்த்துப்பாக்களும் வாழ்த்து மடல்களும் வாசித்தளித்தார்கள். சைவசித்தாந்த சமாஜம், கோவைத் தமிழ்ச்சங்கம், இந்துமத பாடசாலை, தனி நண்பர் கள் முதலியவர்கள் பாராட்டினார்கள். பிறகு தமிழ்நாட்டில் இருந்து, பல அன்பர்களும் பெரியார்களும் அனுப்பிய அஞ் சல் கடிதங்கள் வாசிக்கப்பட்டன. பிறகு பாராட்டுப் பேச் சுக்கள் நிகழ்ந்தன. திரு. தாத்தாச்சாரியார் அவர்கள் அறுபது என்ற இலக்கத்தின் சிறந்த பொருளை விரித் துரைத்தார்கள். இதிகாசம், புராணம், ஜோதிடம், மருத் துவம், இலக்கியம் முதலிய பலவற்றிலிருந்தும் அறுபது என்ற எண் எவ்வாறு போற்றப் படுகின்றது என்பதைப் பற்றிப் பேசினார்கள். கடந்த அறுபது ஆண்டுகள் லௌகி கத்திற்கு உரிமையாகிப் போயின. மேல் நிற்கும் அறுபது ஆண்டுகள் வைதீகத்திற்குச் செலவழிக்கப்படவேண்டும் என்று குறிப்பிட்டார்கள். பிறகு பேசிய மருதூர் நாராயணசாமி அவர்கள் ரெட்டியார் அவர்களின் சிறந்த திருப்பணிகள்பற்றிக் கூறினார்கள். ரெட்டியார் அவர்களின் உறவினர்களில் மூவர்கள் அன்னார் நாட்டிற்கும் குலத்திற் கும் குடும்பத்திற்கும் செய்த நன்மைகளை எடுத்துக் கூறி னார்கள். ரெட்டியார்பட்டி சுவாமிகள் சங்கச் செயலாளர் நரசிம்மலு அவர்களும் பெண்ணாகடம் உயர்நிலைப்பள்ளி ஆசிரியரும் பாராட்டிப் பேசினார்கள். இறுதியில் கூட்டத் தலைவர் அவர்கள் ரெட்டியாருக்குப் புகழ்மாலை சூட்டி னார்கள். இத்துடன் கூட்டம் முடிந்தது. வந்திருந்த நண்

பர்கள் இனிய முகத்தோடு விடைபெற்றுச் சென்றார்கள். இந்த வகையில் சைவப் பெரியாரின் மணிவிழாக் கொண்டாட்டம் நிறைவேறியது. திருவெண்ணெய்நல்லூர் வள்ளல் வாழ்க !

---

2. தலப்பகுதி

திருவெண்பாக்கம்

(கோவை கிழார்)

1. இடம் :— இது ஒரு தொண்டைநாட்டுப் பாடல் பெற்ற ஸ்தலம். இந்த ஸ்தலம் சமீபகாலம் வரையில் தரிசிக்கத்தக்க நிலைமையில் இருந்தது. தற்போது பூண்டி நீர்த்தேக்கத்தில் அமிழ்ந்து கிடக்கின்றது. அந்த அகன்ற ஏரியின் கரையில் நின்றுகொண்டு ஸ்தலம் இருந்த இடத்தை மட்டும் பார்க்கமுடியும். பூண்டி நீர்த்தேக்கமானது திருவள்ளூர் என்ற திருவெவ்வுளூர் நிலயத்திலிருந்து வடமேற்கே எட்டுக் கல்லில் இருக்கின்றது.

2. திருக்கோயில் :—திருவெண்பாக்கத்துக் கோயில் தற்போது கட்டியிருக்கும் பூண்டி அணையின் தென்மேற்கில் இருந்தது. அதனைச் சென்னைச் சூளையில் இருந்த ஒரு வள்ளல் புதிப்பிக்க எண்ணினார். ஆலயம் முழுவதையும் பிரித்துவிட்டு நன்றாய்ச் செதுக்கின . கருங்கற்களால் அதனைக் கட்டத் தொடங்கினார். தாம் திருவொற்றியூரில் புதுப்பித்த ஆதிபுரீசுவரர் கோயிலைப்போலவே இங்கும் கட்டத் தொடங்கினார். திருப்பணியில் நான்கு கல்வரிசை உயரமும் கட்டினார். ஆனால், அதற்குள் பூண்டித் தேக்கத்து வேலை தொடங்கவே இந்த ஸ்தலமும் நீர் நிலைக்குள்ளே அமிழ்ந்து விடுகிறது என்று கண்டு அவ்வேலையை நிறுத்திக் கட்டின கற்களையும் எடுத்துக்கொண்டு சென்றனர். ஆலயத்தில் இருந்த மூர்த்திகள் சேமிக்கப் பட்டுள்ளன.

3. மற்றோர் இணை ஆலயம் :—பூண்டி அணைக்கும் திருவெண்பாக்கத் தலத்திற்கும் இடையே திருவுளம்பூதூர்

என்ற ஓர்ஊரும் அதில் ஒரு பண்டைய ஆலயமும்இருந்தன. இவை இரண்டும் தற்போது நீருக்குள் அமிழ்ந்து விட்டன. இக்கோயிலில் இருந்த உருவங்கள் பூண்டி கிராமத்தில் உள்ள சிவாலயத்தில் வைக்கப்பட் டிருக்கின்றன. இவ் வாலயத்திற்குச் சேர்ந்த சொத்துக்களை அரசியலார் எடுத் துக்கொண்டதற்கு ஈடாக ஒரு பெருந்தொகை கொடுத்துள் ளார்கள். அதனைக்கொண்டு புதியதோர் ஆலயம் கட்டி அதில் முன்னிருந்த திருவுருவங்களைத் தாபிப்பதற்காக ஒரு முயற்சி எடுக்கப்பட்டது. ஆனால், அம்முயற்சி நாளது வரை நிறைவேறவில்லை. பொருள் இருக்கின்றது. இனி மேலும் இத்திருப்பணி நடத்தமுடியும். போன்பர்கள் முன் வந்து இறைவன் அருளுக்கு ஆளாகலாம்.

4. ஐதீகம் :—சுந்தரமூர்த்திகள் திருவெண்பாக்கத் திற்குச் சென்றபோது இறைவனைக் குறித்துக் கண் தரும்படி விண்ணப்பித்தார். அவ்விண்ணப்பத்தில் ‘என் கண்ணை மறைப்பித்தாய். நீ கோயிலில் உளாயோ’ என்று கேட்டார். அப்போது பெருமான் ‘உளோம் போகீர்’ என்று அருளிச் செய்து ஊன்றுகோல் ஒன்றைத் தந்து அருளினர். இந்த வரலாற்றுச் செய்திகள் எல்லாம் திருவெண்பாக்கத்துத் தேவாரப் பதிகத்தில் இருக்கின்றன. இச்சொற்கள் அருமையான சரித்திர உட்சான்றுகள் என்று அறிய வேண்டும். அவைகளில் ஒன்று, ஒன்பது, பத்து என்ற பாடல்களைச் சிறப்பாகப் படித்தறியலாம்.

5. ஒரு மாறுபாடு:—திருவெண்பாக்கத்துப் பதிகத் தில் ‘உளோம் போகீர்’ என்று அருளிச்செய்த சொற் களேபிற்காலத்தில் ‘உளம் பூதூர்’ என்று மாறிவிட்டதா கக் கூறுவர். வழக்கத்தில் இரண்டாவதாக இருந்த ஊரின் பெயர் திருவுளம் பூதூர் என்பது ஆகும். அவ்வூரில் இருந்த கோயில் உள்ளவாறே தண்ணீருக்குள் முழுகி விட்டது. அக்கோயிலில் கல்வெட்டுக்கள் இருந்தன. அவைகளின் படிகள் எடுத்திருக்கிறார்கள். அக்கோயிலின் முன் மண்டபத்தில் சுந்தரமூர்த்திகளுடைய உருவம் ஒன்று ஊன்றுகோல் பிடித்தவண்ணம் நிற்கிறது. இந்தத்

தலம் பாடல்பெற்றது அன்று என்றும், அதனைத் திருவெண்பாக்கத்தோடு மயங்கக் கூடாது என்றும், கயப்பாக்கப் பெரியார் அவர்கள் எழுதியிருக்கிறார்கள். இவ்விரண்டு தலங்களையும் பார்த்த காலத்தில் திருவுளம் பூதூர்க் கோயிலே பெரிதாகவும் சிறப்பாகவும் தோன்றிற்று.

6. மூர்த்திகள் :—திருவெண்பாக்கத்துச் சுவாமியின் பெயர் வெண்பாக்க நாதர். அம்மையின் பெயர் கனிவாய் மொழி அம்மை. இக் கோயிலை வெண்கோயில் என்று பதிகம் கூறுகிறது. பத்தாம் பாடல் காண்க. திருவுளம் பூதூர் சுவாமியை ஊன்றுகோல் கொடுத்த பெருமான் என்பார்கள்.

7. மற்றக் கோயில்கள்:—அடுத்தாற்போல் உள்ள பூண்டியில் ஒரு சிவாலயம் இருக்கின்றது. சுவாமியின் பெயர் புஷ்பவனநாதர். கோயில் இருண்டு கிடக்கிறது. மிகவும் பழுதுபட்டு இருக்கிறது. ஆராதனையும் ஒழுங்காக நடைபெறுவதில்லை.

---

3. சமயப் பகுதி

பண்புநெறியும் - சமயவாழ்வும்

(அ. தா. ப. திருஞானசம்பந்தன்)

பண்பும் - உடலும்

பண்பு உடல் என்றால் அதன் உயிர் ஒழுக்கம். உயிர் இன்றி உடல் நடமாடாது; உடல் இன்றேல் உயிர் நிற்க இடமில்லை. பண்பைச் சிறக்க வைப்பது ஒழுக்கமே! இதனைக் கண்ட வள்ளுவரும் “ஒழுக்கம் விழுப்பம் தரலான், ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்” என்கிறார் அல்லவா ? உயிர் சார்ந்ததின் வண்ணம் மாற்றமுறும். தீநெறியும், நன்னெறியும் ஒழுக்கத்தின் அடிப்படையில் தோன்று

வன. நல்லோர்கள் இணக்கத்தால் நல்லொழுக்கம் பெற்று உயிர் தூய்மை அடைகிறது. உயிர் சிறந்த ஒரு பொருளாய் இருப்பினும், ஒழுக்கமே அதனுடன் சேர்ந்து செம்மை செய்வதால், ஒழுக்கத்திற்கு ஒரு சிறப்பு உம்மையும் சேர்த்துச் சிறப்பிக்கப் படுகிறது. எனவே பண்பிற்கு அரண் செய்வது நல்லொழுக்கமே!

"சுவரை வைத்தே சித்திரம் வரைதல் வேண்டும்" என்பர் நம் ஆன்றோர். உடலை ஓம்பியே உயிரைக் காத்தல் வேண்டும். உடலை ஓம்பாவிடின், உயிரை நிலைக்க வைத்து இறைவனைக் காண இயலாது.

"உடம்பா ரழியி லுயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டார்"

"உடம்பினை முன்ன மிழுக்கென் றிருந்தே
னுடம்பினுக் குள்ளே யுறுபொருள் கண்டேன்"

—திருமூலர்

என்ற திருமூலர் வாக்கைக் கொண்டு, நாம் உடம்பு மிக மிக அவசியம் என்ற முடிவுக்கே வருவோம். இவ்வளவு அருமை பெருமை வாய்ந்த உடலை யொத்தே நாம் பண்பைப் போற்றவேண்டும்.

மக்களும் - அடியார்களும்

உலகிடை நம்போல் உண்டுடுத்தி வாழும் மக்களிடம் நாம் காண்பதுதான் என்ன? பிறரிடம் உள்ள குற்றங்களையே கண்டு நிற்றல் என்பதே! மக்கள் தங்களிடத்தில் உள்ள குற்றங்களை எப்பொழுதாவது எண்ண நோக்கங் கொள்கிறார்களா? இல்லவே இல்லை! தங்களிடம் உள்ள குறைகளைக் கண்டால்தான் திருந்தி வாழ்வார்களே! இதனை விடுத்து எப்பொழுது பார்த்தாலும் பிறர்செய்வதில், சொல்வதில், நடப்பதில் குற்றங் கண்டே நிற்பது சிலரின் நோக்கம். இது பண்பு நெறியை ஓம்புவதாகுமா? ஆகாது! ஏன்? நம் சைவ சமயத்தில் தோன்றிய அடியவர்களை—தொண்டர்களை—நோக்குங்கள்! அவர்களைப் பொறுப்புடன்

நோக்குங்கள்! அவர்கள் வாய் மொழிகளைப் பொன்னே போல் மதித்து, வாயாரப் பண்ணமைத்துப் பாட்டிசை யுங்கள்! அவர்கள் அனைவோரும் அருளியுள்ள பாடல் களில் தங்களையே அறிவிலி, குணமற்றவன், பண்பிலாப் பேயன் எனப் பாட்டிசைத்துச் செல்வதையே காண்கின் றோமே ஒழிய அதற்கு எதிரிடையாக, 'உலக மக்களே! நீங்கள் அறிவிலிகள்! ஒன்றுமறியாப் பேதைகள்! என்று கூறியிருக்கிறார்களா? இல்லை. இவ்விடத்தில் உண்மை உணர்வைச் செலுத்தி ஆராய்ந்து தீர்ப்புக் காண வேண்டும். பெரியவர்கள் தங்கள் கண்களில் உள்ள தூணையே அகற்ற முயன்றார்கள். அதன் வழியாக, மக்களுக்கும் அதனை மறைமுகமாக விளக்கி, பண்பு நெறியின் பணிவுடைத் தன் மையைப் பகர்ந்தனர்.

ஆசிரியர்களும் - மாணவர்களும்

ஆசிரியன் எவ்வழி அவ்வழி அல்லவோ மாணவன் இருப்பான். ஆசிரியன் ஒழுக்கத்தால் கெட்டு நொந்திருப் பானேயாயின், அவனிடம் பயிலும் மாணவனை எப்படி ஒழுக்கச் சீலனாக வருவான் என்று நம்பமுடியும்? எனவே நல்லாசிரியனிடம் பயிலும் மாணவன் எல்லா வகையிலும் சிறந்தே பொலிவன். நாமும் சமயத்தை நோக்கி நல்ல பிள்ளைகளாகத் திகழவேண்டும். அங்ஙனம் திகழ்வதற்கு வழிகாட்ட நல்லாசிரியர்கள் அத்தியாவசியமன்றோ! ஆம்! யாரைக் கொள்வது? நம் சமயப்பயிரை வளர்க்க வந்த அத்தனை அடியவர்களையுமே. பண்பு நெறியுடன் வாழ்ந்த அவர்கள் எவ்விதம் ஓங்கினார்கள் என்பதைத்தான் இனி நாம் காணப்போகிறோம்.

அயலாரை நிந்தித்துப் பேசுதற்குக் காரணமாகிய அவர் குற்றத்தை ஆராய்தல்போல, அவரை நிந்தித்துப் பேசும் தம்முடைய குற்றத்தை ஆராய்ந்து பார்ப்பாரானால் அவருடைய நிலைபெற்ற உயிர்க்கு யாதொரு தீங்குமில்லை என்பதாம். தம் குற்றத்தைத் தெரிபவர் பிறர் குற்றத் தைக் கூற விழையமாட்டார் என்பதே கருப்பொருள்.

எதிலார் குற்றம்போற் றங்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னு முயிர்க்கு. —குறள்

மேற்கூறிய நிலையில் நிற்பவர்கள் அல்லவோ பெரியவர்கள். அவர்கள் பிறருடைய குற்றங்களைக் காணுது தங்கள் குறைகளைக் கண்டு திருத்திக்கொள்ளும் முகமாக சமயத்தை வளர்த்தார்கள். அப்பொழுது அத்தகைய குணநலன்களால் நிரம்பப்பெற்றவர்கள் வளர்த்த சமயம் பண்பு நெறியின் அடிப்படையில் அன்ருே அமைதல் வேண்டும்?

பண்பும் – சமயமும்

பண்பு நெறியும், சமய வாழ்வும் ஒன்றிய தொடர்புள்ளன. இவற்றினை வேறு பிரித்து என்றுங் காண்டல் கூடாது. பிரித்தால், அதனுல் வருந் தீங்கோ சொல்லொணுததுதான். சமய வாழ்வை, ஓர் ஊர்திக்கு ஒப்பிட்டால், பண்பையோ அதனைச் செலுத்தும் தலைமகனுக்கே ஒப்பிடவேண்டும். என்று மனிதன் தன் நாட்டிலே தோன்றி நாகரீகமாக வாழ்ந்து, பிறருக்கு இன்னல் விளைவிக்காது, "உற்றநோய் நோன்றல் உயிர்க்கு (உ)றுகண் செய்யாமை, அற்றே தவத்திற் குரு" என்பதை உணர்ந்தானே, அன்றே, அறிந்தோ அறியாமலோ சமயம் அவனிடம் உருக்கொண்டதெனலாம். அப்பொழுதே பண்பும் ஓரளவிற்கு வந்து சேர்ந்ததல்லவா? சமயம் எதைப் புகட்டி நிற்கிறது? சமயச் சின்னங்கள் அணிவதை மட்டிலுமா? அல்லவே அல்ல! பின் என்ன? நல்லகுணங்களின் ஈட்டத்தைத் தன்னகமாகக் கொண்டு வாழ்வதைத்தானே வற்புறுத்துகிறது? ஆகையால் பண்பு நெறியின் அடிப்படையில் தோன்றியதே சமயமும்—அதன் வாழ்வும் என்பது தேற்றம். அவை இரண்டையும் பிரித்துக் கண்டால்? மதியை இழந்து நிற்போம்! அன்பையும் சிவத்தையும் பிரிக்க முடியுமா? முடியாது! அங்ஙனம் பிரிக்க முனைந்தால்? அதன் விளைவோ அறிவிலி என்ற பட்டந்தான். இதனைத்தான் திருமூல நாயனுரும் " அன்பும் சிவமும் இரண்டென்

பர் அறிவிலார்" என்று விளக்குகிறார் அல்லவா? ஆம். இதனை யொத்தே பண்பும் சமயமும் பிரிக்க ஒண்ணாதது; முடியாதது; நடவாதது.

பண்புநெறிபற்றி ஞானிகள் நோக்கு

இதுவரை பண்பின் அவசியத்தையும் அதனை யொட்டிய சமயத்தின் அவசியத்தையும் ஒருவாறு காணலுற்றோம். இனி சமயப் பெரியார்கள் திருவாக்கினின்றும் அரும்பிய அருமை பெருமை வாய்ந்த பண்பின் இலக்கணத்தைக் காண்போம். பண்பின் பெரும் பயனை ஆய்ந்துணர்ந்து கலித்தொகை அறிவிக்கும் உண்மையைக் காண்க.

"பண்பெனப் படுவது பாடறிந் தொழுகல்"

பெரியவர்களுடைய பாடல்களுக்கு, கருத்துரையோ அன்றி விளக்க உரையோ எடுத்து விளக்கிச் சொல்லாது பாடல் குறிப்புக்களையே ஈண்டுக் குறிக்கின்றேன்.

"குலத்திடையுங் கொடியனொரு குடித்தனத்துங் கொடியேன்
குறிகளிலுங் கொடியனன்றிக் குணங்களிலுங் கொடியன்"

"கிளக்கறியாக் கொடுமையெலாங் கிளைத்தபழு மரத்தேன்
கெடுமதியேன் கடுமையினேன் கிறிபேசும் வெறியேன்"

—இராமலிங்க அடிகள்

"குலம்பொல்லேன் குணம்பொல்லேன் குறியும் பொல்லேன்
குற்றமே பெரிதுடையேன், கோலமாய நலம்பொல்லேன்"

—நாவரசர்

"குறிகளொடு குணமேது மன்றியன
வொழுக நின்றிடு மிரும்பனற்......"

"அறிவதேது மறவறி விலாமை
மயமா யிருக்குமெனை யருளினால்"

"கோல மின்றி குணமின்றி நின்னருட்
சீலமின்றிச் சிறியன் பிழைப்பனோ!

" குணமிலா மனமெனும் பேய்க்குரங்கின் பின்னே
மாருத கவலையுடன் சுழல என்னை " —தாயுமானுர்

" கண்ணப்ப னொப்பதோர் அன்பின்மை கண்டபின் "
—திருவாசகம்

எத்தனை விதங்கள்தான் கற்கினு கேட்கினுமென்
னிதயமு மொடுங்க விலை.
யானெனு மகந்தைதா னெள்ளளவு மாறவிலை
யாதி னும்மபி மானமென்
சித்தமிசை குடிகொண்ட தீகையோ டிரக்கமென்
சென்மத்து நானறிகிலேன்
சீலமோடு தவவிரத மொருகனவி லாயினுந்
தெரிசனங் கண்டு மறியேன்
பொய்த்த மொழியல்லால் மருந்துக்கு மெய்ம்மொழி
புகன்றிடேன் பிறர்கேட்கவே
போதிப்ப தல்லாது சும்மா விருந்தருள்
பொருந்திடாப் பேதை நானே
அத்தனைக் குணக்கேடர் கண்டதாக் கேட்டதா
வவனிமிசை யுண்டோ சொலா
யண்டபகி ரண்டமு மடங்கவொரு நிறைவாகி
யானந்த மான பரமே. —தாயுமானுர்

இந்தப் பாடல் ஒன்றே பண்பு நெறியின் இலக்கணத்தை, இனிமையாகப் புகட்டி நிற்கிற தெனலாம். இன்னும் பல அடியார்களைக் கண்டு அவர்கள் வாய் மொழிகளை ஆய்ந்தாலும், நமக்குக் கிடைக்க இருப்பது மேற்கண்ட பாடல் கருத்துக்கு அப்பால் இராது. தன்னிடத்தில் எந்த நற்குணங்களை யெல்லாம் இல்லை என்று தாயுமானுர் கூறுகிருரோ அவற்றை எல்லாம் (இல்லை என்ற இடங்களிலெல்லாம் உண்டெனப் போட்டுக் கண்டால்) இருப்பதாகக் கொண்டால், அவை பண்பிற்குரிய பட்டியலைப் பணிவுடன் பகரும். இங்ஙனமே பெரிய ஞானிகள் எனத் தகுந்தவர்கள் அத்துணை பேர்களும், தங்களிடம் பண்பு என்பது மருந்துக்கும் இல்லை என்றே பேசியும், எழுதியும் அறிவுறுத்தியும் சென்றிருக்கிருர்கள் என்ருல், அவர்களிடம் அவைகளெல்லாம் அமையப் பெருது தான் கூறிச் செல்கிருர்கள்

என்று படித்துச் செல்வோர் எண்ணினால், பழி இவர்கள் பாலதேயாகும். அதற்கு ஞானிகள் பொறுப்பாளிகளாக மாட்டார்கள். அவர்களைக் கண்டு நாம் அறிந்து தெரிந்து நடக்க வேண்டிய வழித்துறைகளைத் தான் வகுத்துக் கொண்டு நல்வாழ்வு வாழவேண்டும். பண்பற்றவர்களாக வாழ்கின்றோமே என்ற நிலை நம்மனத்திற்கு வரும்பொழுது உடனே திருந்த வேண்டும் என்கிற உணர்வு எழாதிருக்க முடியாது. அவசியம் எழுந்தே தீரும்! அரும்பெறல் சிறப்புக்கள் பெற்று வாழ்ந்த அடியார்கள் சரித்திரங்கள் நமக்குப் புகட்டி நிற்பதுதான் என்?

சைவ சமயமும் – அதன் சிறப்பியல்புகளும்

சமய வாழ்வே அற வாழ்வு! அவ்வாழ்வே பண்பு நெறி வாழ்வு! இருப்பது பொய், போவது மெய் என்ற உண்மை நெறியை விளக்கி நிற்பது சமயம்; பொய்யாய செல்வத்தே, நாளும் புக்கழுந்திக் கிடக்காதே என்றறிவிப்பது நம் சமயம்; வைத்த நிதியும், பெற்ற பெண்டிருமே சிறந்ததென வாழ்வதைத் தவிர் எனப் பறைசாற்றுவதே நம் சமயம்; ஆசையறுத்து அருமையான இறைவழி வாழ்வை வாழுங்கள் என்றெடுத் துரைப்பதுதான் நம் சமயம்; சித்த விகாரக் கலக்கம் தெளிவித்துப் போக்கி, வித்தகச் செந்நெறியைப் புகட்டி வாழ வைப்பது நம் சமயம்; இரும்பு நேர் நெஞ்சகக் கள்வனாலும் தன்னைச் சேர்ந்தக்கால், புகலிடம் அளித்து, வாழவைப்பது நம் சமயம்; மரணம் பிறப்பு என்ற இவை யிரண்டின் தன் மையை மயக்கறுத்து, நம்மை எண் குணத்தான் திருத் தாளிணைச் சேர வழி வகுப்பதே நம் சமயம்.

செம்மை வாய்ந்த சீரிய குணங்களைக் கொண்டு, வாழ்க் கையைச் சிறக்கவைத்துக் கொள்வதற்கே நம் சமயம் உறு துணை புரிகிறதென சுருங்கக் கூறலாம். குறிகளும், அடை யாளங்களும் ஏதோ ஓரளவிற்குச் சமயத்தின் வளர்ச்சிக்குத் துணை செய்வன போன்றிருப்பினும், அதனுள் அமிழ்ந்து கிடக்கும் அரிய கருத்துக்கள் மக்களையே சீர்தூக்கி நல்வழிப்

படுத்தி நிற்கின்றன. தீநெறியில் உழன்று வாழுநரை நல்வழிப் படுத்தி, வழித் துறைகளை வகுத்தளிப்பதும் சமயமே!

நம் சமயத்தில், அனைய நல்ல கொள்கைகளையும் அதன் பால் ஏற்றி, அவற்றை இறைவனுக்கு ஒப்புமைப் படுத்தி வைத்தனர் ஆன்றோர். அடியார்கள் அக்காலந் தொட்டு, இக்காலம் வரையிலே பயன் உள்ள உண்மைகளையே அறி வுறுத்தி வருகிறார்கள். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் னர்த் தோன்றிய ஒரு சமயத்தில்தான் பொன்னெனப் போற்றத்தகும் பொன்மொழிகள் உள்ளன என இறுமாப்பு கொள்ளுகின்றனர் ஒரு சாரார். அவையோ நம் சமயத் தின் கருத்துரைகளெல்லாம் உருமாறி நிறம் மாறி அங்கே உற்பவித்துள்ளன. அன்றியும் மற்றச் சமயங்கள் கூறும் கருத்துக்கள் அனைத்தும் நாம் திண்ணைப் பள்ளிக்கூடங் களில் பயிலும் ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன் போன்ற அளவில் சிறிய, கருத்தில் உயர்ந்த நூல்களில் காணப் படுகிறவையே. எந்த ஒரு சமயமும் பொய் பேசவாகிலும், வேறு எவ்வித நீச்ச செயல்கள் புரியவோ போதிக்கவில்லை. சில சமயங்கள் தாங்கள் நின்றபடியே முடிவானதெனக் கூறும், உலக மறியா கிணற்றுத் தவளையே போல. அங்ங னம் நிற்பதை விடுத்து மேலும் மேலும் ஊடுருவி ஆராய்ந்து உண்மை காண்பதே சமய வாழ்வின் முன்னேற் றத்திற்கு உரிய இலக்கணமாகும். புறச் சமயங்கள் புகலும் கருத்துக்கள் எல்லாம், மாடி வீட்டின் முதற்படியேயாம் என்க. சைவ சமயத்தின் தொன்மை நிலையை ஆராய் வோர்க்கு உண்மை புலனாவது நிச்சயம். அங்ஙனமின்றேல் மேலைநாட்டு அறிஞர்களின் பேருழைப்பால் முகிழ்த்த ஆராய்ச்சிக் குறிப்புகள், மேற்கூறிய கருத்திற்கு அரண் செய்யும் என்பதில் தடையில்லை.

சமயமும் ஒழுக்கமும்

எவர் எந்தச் சமயத்தை மேற்கொண்டாலும், அந்தச் சமய நூல்களிற் சொல்லியவாறு, ஒழுகுவாரேயானால்

நன்மை பெறுவது நிச்சயம். மத வைராக்கியங் கொண்டு என் கடவுள்தான் மெய், உன் கடவுள் பொய் எனச் சண்டையிட்டு உயிரைக் கொடுப்பார் பலருண்டு. சமய நூல்களிற் சொல்லிய விதிப்படி யொழுகுவார் சிலர் கிடைப்பதே அருமை. இதனால்தான் "மதத்துக்குச் சாவார் பலருண்டு; மதத்தின்படி யிருப்பார் சிலருமில்லை" என்பர் ஆன்றோர். சைவ சமயக் கடவுள் இலக்கணங்க ளெல்லாம் முற்றுப் பெற்றது பரமசிவனே.

இறைவன் - உயிர்

ஆன்மாக்கள் அவரவர்கள் செய்த கன்மங்கட் கீடாகப் புத்தம் முதலிய புறச் சமயங்களிற் புகுந்து ஆங்காங்கே செய்யும் புண்ணிய முதிர்ச்சிக் கேற்ப, அகச் சமயத்திற் பிரவேசிக்கப் பெற்று நாளடைவிற் செய்த பெரும் புண்ணிய வசத்தால் சைவ சமயத்தில் வரும் என்பதில் சந்தேகமேயில்லை. எவ்வெச் சமயத்தில் இருப்பினும், அவ்வச் சமயக் கடவுளாகி, அவரவர் வினைக்கேற்ப அருள் செய்பவர் சிவபிரானே. இக்கொள்கையைத் தெள்ளத் தெளிவாக உணர்ந்த, மனத்தை உருகச் செய்யும் மாணிக்கவாசகர் பெருமானும், தன் திருவாசகத்தில்,

"தென்னா டுடைய சிவனே போற்றி
எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி"

என்றல்லவா? அருளியிருக்கிறார். சைவ சமயம் எந்தச் சமயத்தையும் புண்படுத்திப் பேசுவதில்லை. தன்னை இகழ்ச்சி செய்பவர்கள் தோன்றுங் காலத்து, அவர்களை அடியோடு ஒடுக்கி மாய்க்கும் தன்மையும், பெருமையும் சைவத்திற் குண்டெனின் மிகையாகாது. "வம்பு சண்டைக்குச் செல்வதில்லை, வலிய வந்த சண்டையை விடுவதும் இல்லை" என்றதோர் முதுமொழியை நம் சமயத்திற்கு ஏற்றிக் கூறின் மெத்தவும் பொருந்தும். சைவ சமயம் எந்தச் சமயத்தையும் தள்ளி இன்பம் அடைவதில்லை. பரந்த மனப்பான்மையுடன்வாழும் சமயம் அனைவற்றையும் அணைத்தே நிற்கிறது. எல்லாவற்றையும் ஏற்கும் பெருமை இச்சமயத்திற்கு உண்டு.

வாழ்வெனு மையல் விட்டு
வறுமையாஞ் சிறுமை தப்பி
தாழ்வெனுந் தன்மை யோடுஞ்
சைவமாஞ் சமயஞ் சாரும்
ஊழ்பெற லரிது சால
உயர்சிவ ஞானத் தாலே,
போழிள மதியி னானைப்
போற்றுவார் அருள்பெற் றாரே !

சைவ சமயமே சமயம்
சமயா தீதப் பழம்பொருளைக்
கைவந் திடவே மன்றுள்வெளிக்
காட்டுமிந்தக் கருத்தை விட்டு,
பொய்வந் துழலுஞ் சமயநெறி
புகுத வேண்டா முத்திதரும்
தெய்வ சபையைக் காண்பதற்குச்
சேர வாருஞ் செகத்தீரே !

நம் சமயம் உயர்ந்தது எனப் பலருங் கூறியுள்ளதைக் கொண்டு நாம் உயர்ந்தது எனவே கொள்ளல் வேண்டும். அவ்வளவு உயர்ந்த சமயத்தைச் சார்ந்த வாழ்வு வாழின் எங்ஙனமிருக்கும். உயர்ந்தன்றோ விளங்கும் !

சமயம் புகட்டும் பொதுமை வாழ்வு

நம் சமயம் ஓட்டைக் குடிலில், வயிறு ஒட்டி, உறக்கமின்றி ஒண்டி வாழும் ஏழைக்கெனவும், மாடி வீட்டில், மயக்கமிட்டு பஞ்சணையில் படுத்துறங்கும் சீமானுக்கெனவும் தனித்தனி ஒரு வழி வகுத்திலது. எல்லோரையும் தன் தமராகக் கொண்டு வாழும் சீரிய நிலை நம் சமயத்திற்கே உண்டு. பரந்த கொள்கைகள் பூண்டு, திருந்திய திருஞானப் பேற்றைத் தித்திக்கப்பெற்று வாழ்ந்த அன்பர்களிடம் முகிழ்த்த கருத்துகள் உயர்ந்தன ! சிறந்தன ! அவைகளெல்லாம் நாட்டை உய்வித்த வண்ண முள்ளன. ஏன் ? உலக மக்களையே உத்தம வாழ்க்கை நடத்தச் சொல்கின்றன.

"யாதுமூரே யாவருங் கேளிர்"
"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்"
"ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு"

எத்தகைய பொதுமைக் கருத்துக்கள், நம் தமிழ் மக்களிடம் நின்று நிலவின என்பதைக் காண்க. சுருங்க இயம்பினுல், நம் சமயம் அனேயோர்க்கும் "பொதுமை வாழ்வையே" அளித்து நிற்கிற தெனலாம். சோஷியலிசம் என்ற புது மெருகிடப்பட்ட வாழ்வையே நம் சமயம் அன்றும், இன்றும், என்றும் அறிவித்தவண்ண முளது.

நம் சமயம் என்ன புகட்டுகிறது? 1. எளிய உணவு 2. ஆடம்பரமற்ற ஆடை 3. உயர்ந்த நோக்கங்கள் 4. தாழாத உழைப்பு என இந் நான்கையே மிகுதியும் வலியுறுத்துகிற தெனலாம். முன் கூறிய நான்கையும், கால்களாகக் கொண் டெழுந்த மண்டபத்தின், நடுவில்தான் சமயம் கொலு வீற்றிருக்கிறதெனலாம். "மாறுபா டிலாத உண்டி மறுத் துண்ணின், ஊறுபா டில்லை உயிர்க்கு" என்ற கொள்கையை உணர்ந்து உண்பதற்கு உயிர் வாழவில்லை; உயிர்வாழ உண்கின்றேம் என்கிற கொள்கையை நாட்ட, எளிய உணவு உண்டு, நீண்ட வாழ்வை வாழ்ந்து, அவ் வாழ்வில் உள் ளொளியும், சிவாநந்தப் பேரமுதும் பெறுக என்றே சமயம் புகட்டுகிறது. ஆடம்பரமாக வாழ்பவன், ஒழுக்கசீலனுக இருக்க முடியாது; அதனுல் வாழ்வு சிதைவுறும் என்றறி விக்கும் முகமாக ஆடம்பரமற்ற ஆடை அணியுங்கள் என்று இயம்புகிறது நம் சமயம். எளிய நிலையில் வாழும் பொழுது, நான் வாழ, என் மனைவி வாழ, என் மக்கள் வாழவேண்டு மென்ற எண்ணம் நீங்கி, உலக மக்கள் அனே வரும் நம் தமரே என்றெண்ணங் கால்கொண்டு, "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்றே செயல் புரிந்து வாழ வழியைக் காணலாம். அவ்வழியையும் காட்டி நிற்பது நம் சமயம்தான். எளிய உணவு, எளிய உடை, உயர்ந்த கருத்துக்கள் கொள்வதோடு மட்டும் அன்றி நல்ல உழைப்பும் நல்கவேண்டும். அப்போழ்துதான் எண்ணிய எண்ணங்களேச் செயலாக ஆக்க இயலும். இதைத்தானே

நம் சமயம், வினைகள் என்பவற்றை அமைத்துக்கொண்டு, முயற்சி செய்க !உழைக்க! என்று மறைமுகமாகவும், சிறப்பு வகையிலும் காட்டிய வண்ணமுளது. "உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ ?" என்பதைக் கண்டு உணர்க! உழைப்பை நல்கி அடைய முடியாத ஒரு பொருள் இல்லை என்று நமக்கு வள்ளுவப் பெருந்தகையாரும், அறிவுறுத்தி யிருக்கிறார் அல்லவா ?

செய்த வினைக்குத் தக்கதாம் பயனை விலக்குவதாகிய ஊழையும் எதிர்த்து நிற்கவொட்டாமல் புறங்காட்டிப் போகச் செய்து வெற்றியடைவர், ஊழ் விலகுதலால் சோர் வடையாமல் ஆராய்ச்சியினும் வலி முதலியவை அறிதலினும், செயலினும் குற்றமற முயற்சி செய்தலையுடையார் என்பதே.

ஊழையும் உப்பக்கங் காண்ப ருலைவின்றித்
தாழா துஞற்று பவர். —குறள்

இதனைத்தானே நம் சமய நூல்கள் வற்புறுத்திய வண்ணம் உள்ளன. இதற்குப் புறம்பானவைகளை வற்புறுத்து கிறதா என்ன ? அல்லவே !

முடிவு

சமயக் கருத்துகளை, அரசியற் கருத்துகளுக்கு ஒப்பிட்டு ஒருமை காணும் முகமாக, யான் அரசியலில் புகுத்தவேண்டுமென்றெண்ணுவதாக நினைக்கவேண்டா ? சமய வாழ்வு இன்றேல் அரசியல் வாழ்வு இல்லை ; சமயம் நசிந்தால் ஆட்சி நசிந்து, ஆட்சி பீடத்திற்கு ஆட்டங் கொடுக்கும் என்பதே அறிஞர்கள் நோக்கு. இன்றைய போக்கையொட்டி, அரசியலை மனிதனுக்கு ஒப்பிட்டால், அந்த மனிதனுடைய அத்தியாவசியமான முதுகெலும் புக்கே சமயத்தை ஒப்பிடவேண்டும். அப்படியாயின் "சமய வாழ்வு" நம் ஒவ்வொருவருக்கும் எவ்வளவு முக்கியம் என்பதை ஆய்ந்துணரவேண்டு மல்லவா ? அங்ஙனம் உணர்ந்தால் நாம் அனைவரும் இடையறாப் பேரின்பப் பெருவாழ்வு அடைவோம் அல்லவா ? பண்பு நெறிபெற்று வாழ்மின் ! சமயநெறி வாழ்மின் !

4. கலைப்பகுதி

தமிழ் எழுத்துத் திருத்தம்

(ம. ரா.)

சில நாள்களாகத் தமிழ் எழுத்தின் வடிவங்களைத்திருத்தி யமைக்கவேண்டும் என்ற ஒரு கிளர்ச்சி நாட்டில் ஏற்பட்டது. இதனைத் தொடங்கியவர்கள் பத்திரிகை ஆசிரியர்கள். தாம் நடத்திவரும் செய்தித் தாள்களை விரைவில் அச்சடிக்க வேண்டிக் குறுகிய இடத்தில் குறுகிய நேரத்தில் செய்திகளை அச்சில் அமைக்க வேண்டும் என்பது அவர்கள் கருத்து. இலகுவில் பொருள் ஈட்டுவதே அவர்களுடைய முழுநோக்கம். புலவர்கள், ஆராய்ச்சியாளர்கள், எழுத்தாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் முதலான படித்த மக்கள் இத்திருத்தத்தைத் தொடங்கவும் இல்லை, விரும்பவும் இல்லை. பத்திரிகை ஆசிரியர்களிடமும் 'விடுதலை' போன்ற ஒன்றிரண்டு பத்திரிக்கை ஆசிரியர்களே இத் திருத்தத்தை முதலில் விரும்பினார்கள். அவர்களுக்குச் சமயத்தில் நம்பிக்கை இல்லை. சமயத்தாரின் எதிர்ப்பை அவர்கள் சட்டை செய்யவும் இல்லை. இக்கிளர்ச்சி மிகச் சிறியது என்று மக்கள் எண்ணிச் சும்மா இருந்தார்கள்.

இப்படியிருக்க, பொருள் ஈட்டத்தையே மிகுதியாக எண்ணி இருக்கும் ஏனைய செய்தித்தாள்கள் இம் முயற்சியில் நன்மை கண்டார்கள். 'சுதேசமித்திரன்' இத்திருத்தத்தோடு மற்றும் சிலவற்றையும் சேர்த்துத் தமிழை சுலபமாக்கிவிட எண்ணிற்று. அதனால் பத்திரிகைகளுக்கு வேலை எளிதாகி வருவாய் மிகுதியாகுமாம். இந்த எண்ணத்தை உத்தேசித்து எழுத்துத் திருத்தத்தைத் தங்கள் பத்திரிகைகளில் விளம்பரப் படுத்தினார்கள். அன்னவர்களுக்குச் சமயத் தொடர்பு இதில் இருக்கும் என்ற எண்ணமே இல்லை.

அப்படி இருக்க, சென்னை அரசியலார்கள் இந்தக் கிளர்ச்சியை ஆராயத் தொடங்கினார்கள். அறைகுறையாகத்

தமிழைப் படித்துத் தமிழை முழுவதும் கற்றுவிட்டோம் என்ற செருக்குக் கொண்டவர்கள், கல்வித்துறைகளுக்கு தலைமை வகிக்கத் தொடங்கினர்கள். அவர்களுக்கு இந்தக் கிளர்ச்சியில் நன்மை இருப்பதாகத் தோன்றினதே ஒழிய தீமை இருப்பதாகத் தெரியவில்லை. பல்லாயிரக் கணக்கான ஆண்டுகள் பெருகி வளர்ந்த தமிழ் எழுத்துக்கள் எந்த எந்தப் பண்புகளைக்கொண்டிருக்குமோ என்ற கவலையே அவர்களுக்கு இல்லை. சமயச் சார்பிலும் ஏதாவது தடை இருக்குமா என்று அவர்கள் கவனிக்கவில்லை. இக் கிளர்ச்சியை ஏற்றுக்கொண்டு அதற்குப் பரிகாரம் தேடவும் முயன்றார்கள்.

அரசியலார் இந்தக் கேள்வியை ஆராய்வதற்காக ஒரு புலவர் குழுவை ஏற்படுத்தினர்கள். அக்குழுவில் ஒன்றிரண்டு தமிழ் ஆசிரியர்கள் இருந்த போதிலும் பெரும்பான்மையோர் பத்திரிகை ஆசிரியர்களே அங்கத்தினர்கள் ஆக இருந்தார்கள். ஒருவருக்காவது சமயத்தில் ஆர்வம் இருந்ததாகத் தெரியவில்லை. உட்கருத்து அறியக் கூடிய ஒன்றிரண்டு அங்கத்தினர்களும் தங்கள் நிலைமையை ஒட்டிப் பெரும்பான்மையான பெயரின் அக்கரைக்கு எதிர் சொல்ல வலிமை அற்ற பேர்வழிகளாய் இருந்தார்கள். இவ்வித ஆராய்ச்சிக் குழுவினல் என்ன பலன் கிடைக்கும் என்பதைக் கூறவும் வேண்டுமா ? அவ் வாராய்ச்சிக் குழு வெளியிட்ட அறிக்கையை அரசியலார் எடுத்துக் கொண்டு ஒருநாள் காலையில் திடீரென ஓர் உத்தரவை வெளியிட்டார்கள். அதனைக் கண்டு தமிழ் உலகம் வியப்பும், வெறுப்பும் அடைந்து கலக்கம் உற்று இருக்கிறது. பல தமிழ்ச் சங்கங்களும் தமிழ்த் தாள்களும் எதிர்த்துக் கட்டுரைகளை வெளியிட்டு வருகின்றன.

இத் திருத்தங்களை வேண்டியவர்கள் அமைத்துக் கொள்ளலாம் என்று அரசியலார் ஆணையிட்டு இருந்தால் யாரும் எந்த எதிர்ப்பும் கூறமாட்டார்கள். ஆனல் இந்தத் திருத்தங்களை அச் சகங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் சிறப்பாகப் பாடசாலைப் புத்தகங்களில் கையாள

வேண்டும் என்றும் ஆணை இட்டது சிறிதும் பொருந்ாது. இவ்விதமான எழுத்தின் வடிவமாற்றம் எந்த மொழியிலும் எக்காலத்திலும் நடந்ததே இல்லை. அரசியலார் இவ்விதத் திருத்தத்தில் கைவைத்ததே இல்லை. எழுத்தின் வடிவு இயற்கையாக வளரக்கூடியதே ஒழிய செயற்கையில் ஏற்படுவது அன்று. எழுத்து இயல் அறிஞர்கள் இதனை அறிவார்கள். அப்படி இருக்க பன்மொழி அரசாங்கமாகிய சென்னை அரசாங்கம் இச் சீர்திருத்தத்தில் உடன் பட்டது ஒரு பொல்லாத செயல். பல்கலைக் கழகங்களாவது இதனை ஏற்றிருந்தால் செவ்வியதாக இருக்கும். நாட்டில் கணக்கற்ற தமிழ்ச் சங்கங்கள் உண்டு. யாரைக் கேட்டு இம் முடிவுக்கு வந்தார்கள் என்று தெரியவில்லை. தமிழ் எழுத்தைச் சீர்திருத்தம் செய்ய ஒரு தெலுங்கு அதிகாரியும் ஒரு மலையாள அமைச்சரும்தானா உரிமை பெற்றவர்கள் ? இவர்கள் தங்கள் தாய் மொழிகளில் உள்ள பற்று அத்தனை எழுத்துக்களை குறைக்க எண்ணவில்லையே? தமிழ் மொழிக்கு மாத்திரம் ஏனோ ஓரம் காட்டுகிறார்கள் ?

இப்பொழுது வெளியிட் டிருக்கும் திருத்தங்களின் குறைவுகளை நன்றாக ஆராய்ந்து செந்தமிழ்ச் செல்வி, சென்னை மாகாணத தமிழ்ச் சங்கம் முதலியவைகள் பல துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டுள்ளார்கள். அவைகளில் கண்ட எதிர்ப்புகளை இங்கே குறிக்க வேண்டியதில்லை. அவ் வெதிர்ப்புக்கள் மிகவும் வலிமை உள்ளவைகளே. இங்கே குறிக்கும் எதிர்ப்பு சமய சம்பந்தம் ஆனது. அதையும் அதிகாரிகள் ஆராய்ச்சி செய்வது அவர்களுடைய கடமை.

தமிழ் எழுத்து ஒலி வடிவு உரு வடிவு என்ற இரண்டு பண்புகளைக் கொண்டது. இவ்விரண்டைப் பற்றியும் தொல்காப்பியம், நன்னூல் முதலிய இலக்கணங்கள் விதிகளை வகுத்திருக்கின்றன. ஒலிவடிவு மட்டுமே யன்றி உரு வடிவு அல்லது வரி வடிவும் சிறப்புடையது. வரி வடிவு மாறினால் எழுத்தின் சிறப்பே மறையும். தமிழ் எழுத்துக்கும் சைவசமயத்திற்கும் மிகுதியும் தொடர்பு உண்டு.

எழுத்தின் வரிவடிவத்திற்குப் பொருளும் உண்டு. மூத்த பிள்ளையாரின் தலைவடிவம் ஓங்கார வடிவமானது. அதுவே பிரணவ அக்ஷரம் எனப்படும். அவ்வெழுத்தின் பகுதிகளே அகாமுதல் னகரம் வரை அமைந்த எழுத்துக்களின் கூட்டு அமைப்பு ஆகும். இந்தக் கொள்கை தமிழ் மொழியில் ஊன்றி இருக்கின்றது. அப்படி இருக்கச் சமயத் தொடர்பு பெற்ற எழுத்துக்களின் வடிவுகளை மாற்றுவது எளி தன்று.

மேலும், இந்தக் கருத்தை முழுவதும் அறிய வேண்டும் என்றாலும் தெளிவுபட ஆராய வேண்டுமென்றாலும் காலம் சென்ற பெரியார் பா. வே. மாணிக்க நாயக்கர் அவர்கள் வெளியிட் டிருக்கும் தமிழ் எழுத்துக்களின் ரகசிய அர்த்தம் (The Mystic Aspect of Tamil Alphabet) என்ற நூலில் காணலாம். அதே கருத்தினை விரிவாக விளக்கி ஆசிரியர் திரு. கோவிந்தசாமி நாட்டார் அவர்கள் பல அரிய சொற்பொழிவுகளை நிகழ்த்தி யிருக்கின்றார். தற்போது ஒரு பெரும் நூல் எழுதவும் தொடங்கி இருக் கின்றார். அது விரைவில் வெளிவரக் கூடும்.

ஆங்கிலத்தில் அவசியம் அற்ற எழுத்துக்கள் கணக் கின்றி உண்டு. அவைகளில் ஒரு எழுத்தை குறைக்கச் சொன்னாலும் உலகமே எதிர்க்கின்றது. தமிழில் மட்டும் ஒரு சிறு குழு ஆராய்ச்சி செய்ததாகச் சொல்லி எழுத்து வடிவங்களை மாற்ற முடியுமா? இந்த மாற்றம் சென்னை அரசாங்கத்திற்கு உட்பட்ட ஒரு பகுதிக்கு மட்டுமா அல்லது இலங்கை, மலேயா முதலிய வெளி நாடுகளுக்கும் செலாவணி ஆகக் கூடியதா? இக் கருத்துக்களை எல்லாம் ஆராய்ந்து ஒரு தகுதியான முடிவுக்கு அரசியலார் வருவதே நலம் அல்லவா?

—·—

5. சாத்திரப்பகுதி

சிவப்பிரகாசம் மூலமும் உரையும்

(சித்தாந்த ரத்நாகரம் - முத்து. சு. மாணிக்கவாசக முதலியார், ஆரணி)

(மலர் 23; இதழ் 12 ; பக்கம் 523-ன் தொடர்ச்சி)

உண்மை

சிவப்பிரகாசத்தினை ஆசிரியர் உமாபதி சிவாசாரியார் முப் பொருள்களின் பொதுவியல்பு சிறப்பியல்பு என்றிரு வகையுள் உணர்த்தியருளினர். பெத்தத்தினின்ற நிலை பற்றிக் கூறும் இலக்கணம் பொது. முத்தியினின்ற நிலை பற்றிக் கூறும் இலக்கணம் சிறப்பு. முன்னது ஆகந்துகம். பின்னது சகசம். சகசமாதலானும் ஏனைச் சமயத்தார் கூறுஞ் சிறப்பியல் பெல்லாம் போலியாதலானும் இஃது உண்மை எனப்படும்.

அளவை நூல்களுட், பல பொருட்குப் பொதுவாய இலக்கணம் பொதுவியல்பு, ஒருபொருட்கே யுரிய இலக்கணம் சிறப்பியல்பு என்பர் எண்ணர். அவை வேறு இவை வேறு. இவை தடத்த லக்கணம் சொரூப லக்கணம் என்னும் வடசொற்குப் பரியாயப் பெயராக் கூறப் படுவன. இவற்றின் சொல்லொருமைப் பற்றி மயங்கற்க (மாபாடியம்-சிறப்புப்பாயிரம்) ௨அ-ஆவது திருவிருத்தத் துள் "அகலாமுனம்" என்பது முதல் ௨கூ-ஆவது திருவிருத் தத்துள், "இது நிலையார் சுத்தம்" என்பது முடியவுள்ள பகுதியால், இவ்வுண்மை, உத்தேசமாயும் சுருங்கிய இலக் கணமாயும் தோற்றுவாயாயும் நிற்றலைக் காண்க. பரீட்சை இவ்விரிந்த பகுதியாலறிக.

(௯க) இங்கிவை பொதுவி யம்பு
மேன்பர்க ளிதன்மே லான்மாத்
தங்கிய வஞ்ச வத்தை
தன்னுண்மை யுணர்த்துந் தன்மை

பொங்கொளி ஞான வாய்மை
யதன்பயன் புனித ஞம
மங்கதி லணைந்தோர் தன்மை
யறைகுவ னருளி ஞலே.

என்பது. இச் சாத்திரத்துள், இவ்வைம்பது திரு விருத்தங் களும் பதிபசுபாசம் என்னும் முப் பொருட்கும் பொது வியல் புணர்த்தும் என்பர் ஞானத்தோர். இதன்மேலுள்ள திரு விருத்தங்களாலே, திருவருட்டுணையை முன்னிட்டு, (க) ஆன்ம லட்சணமும் (உ) அஞ்சவத்தையும் (ந) ஆன்ம சுபாவ முணர்த்துந் தன்மையும் (ச) திருஞான வாய்மையும் (ரு) அதன் பயனும் (சு) திரு வைந்தெழுத்தும் (எ) சிவா நந்த நிறைவிலணைந்த சீவன் முத்தரியல்பும் சொல்லுவே னென்பதாம்.

இங்கு, இவை இரண்டும் முறையே இந் நூலையும் இதன் 50 பாக்கொண்ட முதற் பகுதியான பாயிரத்தையும் பொதுவையும் சுட்டின. இங்கிவை என ஒரு சொன்னீர் மையதாக் கொண்டாரு முளர். பொது-பொது வியல்பு.

திருத்தணிகை யாற்றுப் படையிற் குறித்தவாறுவன:—

க. ஆன்மா (உயிர்)
உ. அஞ்சவத்தை (அவத்தை)
ந. தன்னுண்மை யுணர்த்துந் தன்மை (உணர்த்துந் தன்மை)
ச. பொங்கொளி ஞானவாய்மை (அருளியல்பு)
ரு. அதன் பயன் (அத்திருவருட் பயன்)
சு. புனிதனுமம் (பெரும் பெயர்த் திறம்)
எ. அதிலணைந்தோர் தன்மை (பெற்றவர் முறை)

இந் நூலாசிரியாருளிய திருமுறைத் திரட்டும் திருவருட் பயனும் ஞானதீட்சா விதியின் ஆறுவது திருப் பாடலான

"உணர்ந்துணர்த்தப் புணர்ந்துடற்கட் பயனுகரும் உயிரொன்
றுண்டதுநீ கண்டுகொளென் றுண்மையில்ஐந் தவத்தை
புணர்ந்தபதி யுபகாரம் போதவுரு மும்மைப்
பொருவில்பயன் திருநாமம் புனிதனிடைப் புணர்ச்சி

அணைந்தவகை யிவையொன்பா னறியுநெறி யவற்று
ளல்லாதுந் தெரிவித்தற் காரம்பித் ததன்மேல்
மணந்தருநின் கரமலர்தூய் வணங்கென்று வணங்க
வந்தனைசெய் மைந்தன்முடி மலரடிவை மாபே"

என்பதும் நோக்கின், இந்நூற் பகுப்பு முன்னூற் பகுப் பொடு வேறுபடுதல் விளங்கும். விளங்கினும், திருவாவடு துறைத் திருமடத்துச் சம்பிரதாயத்திற் பன்னிரு சூத்திரப் பகுப்பாக்கி யுணர்தல் மரபு.

க. ஆன்மா (உயிரின் போது வியல்பு)

இஃது ஆன்ம லட்சணங் கூறுகின்றது.

(ருஉ) சேறிந்திடு முடலுண் மன்னிச்
சேர்புலன் வாயில் பற்றி
யறிந்ததி லழுந்து மொன்று
மறிந்திடா தறியுந் தன்மை
பிறிந்தடை வஞ்ச வத்தை
பெருகிய மலத்தாற் பேணி
யுறுந்தனி யதீத முண்மை
யுயிர்க்கென வுணர்த்து மன்றே.

என்பது. சூக்குமரூபத்துள் நிலைத்து, (தூலதேகத்திற்) சேருஞ்சுவை யொளியூறோசை நாற்றமாகிய புலன்களை அவற்றிற்கு வாயிலாகிய நா, கண், மெய், செவி, மூக்கு ஆகிய பொறிகளைப் பற்றி அறிந்து, அறிந்த தொன்றனில் அழுந் தும். அவற்றுள் யாதும் அறிந்திடாது. (ஆன்மாவும்) அக்கருவிகளைப் பிறிந்து, அறியுமியல்பு னீங்கி, அடைவே ஐந்தவத்தையைச் சகசமல மறைப்பாற் பெறும். அவ் வான்மாவிற்கு உண்மையாவது கருவியொன்றுஞ் சாராத தனியாயிருக்குந் துரியா தீதம் என்று (சிவாகமங்கள்) உணர்த்தும் என்பதாம்.

ஆன்மாவிற்குத் தூலதேகம்போனீங்காது, வினைத் தொடர்புள்ளவரை விடாது தொடர்ந்து செறிதலின்

'செறிந்திடுமுடல்' என்பது சூக்கும ரூபத்தைக் குறித்தது. அவ் விரண்டனுள், சூக்கும ரூபமே காலநீட்சிக் குரிய தாதலின் 'மன்னி' என்றார். உடம்பினகத்தனவாகிய வாயில்கட்குப் புறத்தனவாகிய புலன்கள் இயல்பல்ல. அதனாற் 'சேர் புலன்' எனப்பட்டன. யாக்கை யகத் துயிர் புறப்புலன்களை நேரே பற்ற மாட்டாது நடுவே பொறிவாயில் கொண்டு கவர்தலையுணர்த்த இத் திரு விருத் தத்துள்ளும் 'புலன்' என்றதற்கும் 'பற்றியறிந்து' என்ற தற்கு மிடையே 'வாயில்' என நிறுத்தப் பட்டது. ஆன்மாச் சார்ந்ததன் வண்ணமாதலை 'அறிந்ததி லழுந்தும்' என்றும், சுட்டியறிதலை 'அறிந்து' என்றும், தத்துவங்கள் சடமாதலை 'ஒன்றும் அறிந்திடாது' என்றும், உயிர்க்குக் கருவியான அத் தத்துவங்கள் அறிதுணையாதற்கண் இடை யறவு படுதலை 'அறியுந் தன்மை பிறிந்து' என்றும், சடமாய அவற்றில் தான் கூடுதலும் பிரிதலுமன்றித் தன்னில் அவை கூடுதற்கும் பிரிதற்கும் ஆற்றலின்மையை யுணர்த்த உயிர்மேல் வைத்துப் 'பிறிந்து' என்றும், அவ் விடையறவாலுயிர் அடையும் நிலையை வரையறுத்து 'அஞ்சவத்தை' என்றும், மும்மலங்களுள் உயிர்க் குறும் பொல்லாங்கிற் பெருகியது ஆணவமென்றலைப் 'பெருகிய மலத்தால்' என்றும், அவத்தை யுறற்கு அதுவே ஏதுவாத லின் 'மலத்தாய்' என்றும், அவத்தை யுறுதலில் உயிர்க்கு வெறுப்பின்மையைப் 'பேணி' என்றும், அவத்தையால் அறிவு வளர்தலின், உயிர்க்கு அதன் இன்றியமையாமை தோன்ற, 'உறும்' என்றும், பெத்தத்தில் ஆன்மாவின் உண்மையாவது கேவலாவத்தையில் துரியாதீதம் என்னும் ஆணவத்தோடத்துவிதமாதலின், 'தனியதீதம் உண்மை' என்றும் இவையெல்லாம் முப்பொருள்களுள் பாசத்திற்கும் பதிக்கும் ஏலாமையால் பசுவிற்கே ஏற்குமென்றுணர்த்த 'உயிர்க்கு' என்றும் அருளினார். இப்பசுலக்கணம் ஏனைக் காட்சியுங் கருதலுங் கொண்டுணர்த்த லரிது. உரையளவையே எளிதினுணர்த்தும் என்னத் தோன்றா வெழுவா யாகச் சிவாகமங்களைக் கொள்ளவைத்தார்.

முதல் வாக்கியத்திற்குப் பலரும் பலவாறுரைத்த வாற்றை அவாவருரையிற் காண்க.

இத்திருவிருத்தம் ஆன்மலட்சணத்தை இனிதுணர்த்திற்று.

இஃது உயிருக் கறிவுண்மை பற்றிய ஆராய்ச்சி.

(ருரு) உருவுணர் விலாமை யானு மோரோரு புலன்க ளாக
மருவிநின் றறித லானு மனுதிக டம்மின் மன்னித்
தருபய னுகர்த லானு முயிர்சட மாத லானு
மருவினை யுடலு ளாவி யறிவினு லறியு மன்றே.

என்பது. உடம்பு, பொறிகள், அந்தக்கரணம், பிராணவாயு என்பவற்றுள் ஒன்றும் அறிதற்றொழிலுடையன அல்ல. உடம்பு அறியாது என்பதில் ஐயமிராது. பொறிகளுள் ஒன்றறிந்தது ஒன்றறியாது. ஒவ்வொரு புலனையே யறியும். அப்பொறியைந்தானுலும் ஐம்பயனு மறிவது அவற்றின் வேருயதொன்றே. அந்தக்கரணங்களும் சடமே. அவற்றுள், மனமாகிப் பந்தித்தும் புத்தியாய் ஆராய்ந்தும் சித்தமாய்ச் சிந்தித்தும் அகங்காரமாய்த் தெளியாதும் நிற்பது அவற்றின் வேருய தொன்றே. பிராணவாயுவும் சடமே. அதனின் வேருயதொன்றே அறிதற்றொழிலை நிகழ்த்துகின்றது. இங்குக் காட்டிய நுண்ணுடம்பினுள் நின்று பருவுடம்பினை இயக்கி உயிர்த்து, மனுதியைக் கொண்டு, பொறிகளின் வாயிலாக ஒவ்வொரு புலனைத் தன் சிற்சத்தியால் ஆன்மா அறியும் என்பதாம்.

1. உடம்பினுள் பொருந்திநின்று யானெனதென்னுஞ் செருக்குறுதலால், உடம்பு அறியாது. ஒன்றுலுங் குறைபாடின்றிக் கிடக்கும் பிணக்கிடையினும் உறக்கத்தினும் அறிவு நிகழக் கண்டிலம். விறகும் தானும் வேறறக் கிடந்து வேம்பொழுது சூடறிதலில்லை. அறிதலாகிய நிகழ்ச்சி அவ்வுடம்பின் வேருய தொன்றுலாவதே. கனவொடு பயின்றதை நனவில் உற்றறிந்து நிற்பது வேறுதலின் சூக்குமரூபம் சித்தன்று, சடமே.

2. உடம்பில் நின்று, உறங்கும்போது அறியாமல் நனவில் பொறிகளே அறியும் என்பதும் பொருந்தாது. நனவிலும் அப்பொறிகளுள் ஒன்று அறிந்ததை மற்றொன்று அறியாது. அன்றியும் ஒவ்வொன்றாயறிவதன்றி ஒருங்கே யறிவனவல்ல. அவ்வைந்தும் சித்தல்ல. சடமே. பிறிதொரு சித்துக்குக் கருவியே.

(3) அந்தக்காரணங்களை அடக்கவேண்டுழி அடக்கி உட்கருவிகளாக்கியும் ஆக்கவேண்டுழி ஆக்கிப் புறக் கருவி களிற் போக்கியும் வெவ்வேறவத்தைகளை யணைவது பிறி தொன்றுண்டு. அதுவே சித்து. இவை சடமே. இவற் றின் வேறாய், யானெனதென்னும் செருக்கிற்கு ஏதுவாய ஆணவமலம் உடனாயிணைந்து நிற்கும் உயிரே இவ்வந்தக் காரணங்களாலாகிய நான்கு தொழிலையும் இவற்றோடு கூடி யறிவது.

இதனால், காட்சியளவைக் கெய்தும் உடம்பே, பொறிகளே, அதற்கெய்தாத அந்தக்காரணமே, அரு வுடம்பே அறியும். உயிரென்றொன்று வேறு எற்றுக்கு என்பாரை மறுத்து, அவற்றின் வேறாய் ஒருயிருண்மை பாரிசேடத்தால் உணர்த்தப்பட்டது.

அருவினையுடம்பு என்பது சூக்கும ரூபத்தையும் அன்றே என்பது அநாதி சிருட்டி யாரம்பத்தையும் உணர்த்தின என்று கொண்டுரைத்தமை பிறருரையிற் காண்க. (தொடரும்)

---

6. கவிப் பகுதி

உள்ளுறை உவமம்

தலைவரும் தலைவியும் தக்க வயதினராய்த் தலையாய அன்புமிகுந்த சீரிய முறையில் இல்லறம் நடத்தி வருகிறார் கள். ஒரு நன்னாள் வருகின்றது. மாலைப் பொழுதிலே

தலைவன் திருக்கோயிலுக்கு இறைவனை வணங்கச் செல்லு கின்றான். தலைவி வீட்டிலே அமுதுபடைத்துக்கொண்டிருக் கிறாள். இருண்டுவிட்டது. அவள் தலைவன் வரவை நோக் கிக் கொண்டிருக்கிறாள் ; இறைவன் பிரசாதத்தைப் பெற் றுக்கொண்டு வரும் தலைவனுக்கு உணவு பரிமாறிவிட்டுத் தான் உண்ண எண்ணிக்கொண்டிருக்கிறாள். வெகு நேரம் ஆகியும் தலைவன் வரவில்லை. தலைவி உணவு அருந்தவில்லை. களைப்புத்தோன்றி உறங்கிவிடுகிறாள். காலைப் பொழுது விடிந்தது. செவ்வான ஒளி கண்டு திடுக்கிட்டு எழுந்திருக் கிறாள். எதிரே தலைவன் தோன்றினான். உருவம் மாறி யிருந்தது. உடலெல்லாம் சந்தனச் சாந்தும் குங்குமக் குழம்பும் நறுமண வீச்சும் தோன்றிற்று. அது கண்டு அவள் திடுக்கிட்டாள். 'ஏது மணந்த தலைவியை விட்டு விட்டு இரவெல்லாம் பரத்தையர் மனையில் பொழுது போக் கிக் கண்கள் செவந்து வந்திடுகிறாரோ' என்று ஐயுற்று நெஞ்சம் தடுமாறி யாதொரு பேச்சும் பேசாது சமைய லறைக்குள் புகுந்து இல்லறச் செயலில் ஈடுபடத் தொடங்கி னாள். தலைவனோ மனைவி தன் உருவத்தைக் கண்டு ஐயுறு கிறாள் என்று எண்ணிக் குளத்திற்குச் சென்று நீராடிவிட்டுக் கோயிலில் வணங்கிவிட்டு வீடுதிரும்புகிறான். ஆனால் தலைவி பேசவில்லை. ஊடல் தீரவில்லைபோலிருக்கிறது என்று எண் ணித் தான் கோயிலுக்குள்ளேயே ஆராதனை முடித்தபிறகு சந்தனம் முதலியவைகளை அணிந்துகொண்டபிறகு நிட்டை அமர்ந்திருந்தபோது அது அறியாத அர்ச்சகர் கதவைச் சாத்திக்கொண்டு வெளியேறத் தான் வெளிவரும் வகை யின்றி இரவு முழுதும் கோயிலிலேயே கழித்துக் காலையில் அர்ச்சகர் உஷத் பூசைக்காகத் திருக்கதவைத் திறந்தபோது வெளிவந்ததாகச் சொன்னான். அந்தச் செய்தியை அர்ச்ச கர் மூலமாகத் தலைவி கோயிலுக்கு மறுநாள் சென்றபோது அறிவிக்கப்பட்டது. அதனைக் கேட்டதும் தலைவி மிகவும் பச்சாத்தாபப்பட்டுத் தலைவனைக் கண்டதும் காலில்விழுந்து மன்னிப்புக் கேட்டுக்கொண்டாள். ஊடல் முடிந்தது. உண்மை அன்பு பெருகிற்று.

இவ்வாறு ஒரு புனிதத் தலத்திலே ஒரு சமய வாழ்க்கை பூண்ட இல்லத்திலே நடந்தது. ஆனல் அஃறிணை உயிர்களிலும் அவ்வாறு நடைபெறுமோ? அந்தத் தலத்திலே வாழ்ந்த உயிர்களும் மேன்மைப் பண்பு கொண்டவைகளே. அவைகளும் அன்புநெறி, ஊடல் விளையாட்டு, மயக்கத் தெளிவு, மீண்டும் அன்புப் பெருக்கம் இவைகளை அனுபவிக்கின்றனவாம். அதனைத் தெய்வத் தமிழை இன்னிசையில் பாப்பின அரும் பெரும் கவிராச சிங்கம் அருளிச் செய்திருக்கின்றது. அவ்வழகிய அருள்வாக்கை எடுத்துரைப்போம்.

திருவீழிமிழலை என்னும் புனிதத் தலத்திலே திருக்கோயிலுக்கு அணித்தாற்போல் ஓர் அழகிய தடாகம் உண்டு. அத்தடாகத்தில் வெகு இனிமை பொருந்திய செங்கழுநீர் என்னும் குவளைக் கொடிகள் முளைத்திருக்கின்றன. அக்குவளைகள் என்ற நீலோற்பலங்கள் கதிரவனைக் காணும்போது அவனையே நோக்கிக்கொண்டு அவனுடைய கதிர்களைப் பருகிக் கொண்டு இதழ்களை விரித்து மணத்தை வீசிவரும். அவன் மேற்கே சாயும்போது தம் இன்பம் குன்றி இதழ்களைக் குவித்துக்கொள்ளும். அம் மலர்களில் தாதுக்களும் தேனும் பொலிந்திருக்கும். அவற்றைக் கண்டு வண்டுகள் மொய்க்க வரும். இத்தன்மை சிறப்பைக் கொண்ட செங்கழுநிலைத் தடாகத்தில் ஒரு நாள் நிரம்ப மலர்கள் விரிந்திருந்தன. அப்போது இரண்டு வண்டுகள் தம்பதிகளாக அவற்றை நோக்கிச் சென்றன. ஆண்வண்டு பெண் வண்டிடம் தான் மதுவுண்டுவிட்டு வருவதாகச் சொல்லிவிட்டுப் பறந்து ஒரு குவளையிடம் சென்றது. பெண் வண்டோ முன்னமே நிரம்ப மது குடித்திருந்ததனுல் தன் இருப்பிடத்தில் தங்கச் சென்றது. ஆண்வண்டு விரைவில் வரும் என்று அது எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. ஆனல் ஆண்வண்டு வரவில்லை. இரவு முழுதும் விழித்துக்கொண்டு கவலையோடு இருந்தது தேன் உண்ணச் சென்ற ஆண் வண்டு ஒரு குவளைக்குள் அமர்ந்து தேனைக் குடித்துக்கொண்டு அதன் மயக்கத்தில்

அங்கேயே சற்று உறங்கிவிட்டது. அப்போது பொழுது போய்க் கதிரவன் மறைந்தான். குவளையின் இதழ்கள் குவிந்தன. அவ்விதழ்களுக்குள் வண்டு சிறைபட்டது. உறக்கம் தெளிந்தவுடன் வெளியில் பறக்க முயன்றது. இதழ்களின் பிடியிலிருந்து வெளியே கிளம்பமுடியவில்லை. இறகுகளை அடித்துக்கொண்ட காரணத்தினால் அம்மலருக்குள் இருந்த மகரந்தம் அதன் உடலில் பட்டு மஞ்சள்நிறமாக மாறிவிட்டது. இரவு முழுதும் தன் மனைவி என்ன நினைப்பாளோ என்று ஏங்கிக்கொண்டிருந்தது. காலையில் கதிரவன் ஒளிவர அவனது கதிர்கள் குவளையை வருடவே அக்குவளை தன் இதழ்களை விரித்தது. உள்ளே சிறைபட்ட வண்டு உடனே விடுதலை பெற்றுத் தன் மனைவியிடம் பறந்து சென்றது. மனைவி தன் தலைவனுடைய உருவத்தின் நிறமாறுபாட்டைக் கண்டதும் பரத்தையிடம் சென்றதாக எண்ணி அதனை வெறுத்து ஊடல் செய்தது.

பின்னர் உண்மையை அறிவித்த பிறகு ஊடலைத் தவிர்த்து இரண்டும் இன்பசாகரத்தில் திகழ்ந்தன. இந்தச் செய்தி திருவீழிமிழலையில் நிகழ்ந்ததாகச் சம்பந்தப் பெருந்தகையார் அடியிற்கண்ட அருமையான அடிகளில் கூறுகின்றார்.

“சேறுடு செங்கழுநீர்த் தாதாடி மதுவுண்டு சிவந்த வண்டு
வேறாய உருவாகிச் செவ்வழிநற் பண்பாடும் மிழலை யாமே”

இதன்கண் அடங்கி உள்ள உள்ளுறை உவமத்தைக் கண்டு ஆராய்க.

இனி, இதைப் போல வைணவப் பெரியார்களும் அழகு பெறப்பாடியுள்ளார்கள். ஆண்டாள் “பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படின்” என்று சுருக்கமாக இக்கருத்தையே பாடி இருக்கின்றார்கள். இந்தப் பாசுரத்தின் ஓரடிக்கு உரை எழுதிய உரையாசிரியர்கள் மேலே கண்ட கதாரூபமான வியாக்கியானம் செய்திருக்கிறார்கள். இங்கே செழுமை விவரிக்கிற வருணனை கோயிலில் வழி

படும் ஆதிக்கக் குடும்பத்தின் ஊடல் விளையாட்டையும் அதனால் நிகழும் பேரின்ப விளைவையும் காட்டுகின்றது அல்லவா? உள்ளுறை உவமமும் சங்கத்து நூல்களில் மட்டுமேயன்றித் திருமுறைகளிலும் கையாளப்பட்டு வந்து மிளிர்கின்றது என்க.

---

7. ஆராய்ச்சிப் பகுதி

சங்க காலத்தில் சிவபெருமான்

(அ. மு. பரமசிவானந்தம்)

சங்க காலம் தமிழ் நாட்டுப் பொற்காலம் என்பார்கள். அக்காலத்தே தமிழ்நாட்டில் வகுப்பு வேறுபாடும் சமய வேறுபாடும் இல்லை என்னலாம். வகுப்பு அல்லது சாதி என்ற பகுப்பு ஒன்று அந்நாளில் தமிழ்நாட்டில் இல்லை எனலாம். அவரவர் தம் தொழில் பற்றிய வேறுபாடுகள் இருந்தனவேயன்றி, பிறப்பால் வகுப்பு அல்லது சாதி கற்பித்து வாழும் பிழைபட்ட நெறி அக்காலத்தில் இருந்ததில்லை. அதனாலன்றோ ஏறக்குறைய அக் காலத்தில் வாழ்ந்த திருவள்ளுவனார் 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையான்' என்று பாடி விட்டுச் சென்றார். எனவே சாதியே இல்லாத நாட்டில் அதுபற்றிய வேறுபாடு தோன்ற வழியேது?

சங்க காலத்தில் தமிழ் நாட்டில் சமயங்கள் இருந்தன. இறைவனைப் போற்றும் நெறிகள் அக்கால வாழ்வின் அடிப்படைகளாக அமைந்திருந்தன. சைவமும் வைணமும் தமிழ்நாட்டுப் பழம் பெருஞ் சமயங்கள் என்ற கொள்கை யாராலும் மறுக்கப்படாத ஒன்றாகும். அவற்றோடு கடைச் சங்க காலத்தே பௌத்தமும் சமணமும் தமிழ் நாட்டில் நிலை பெறலாயின. காலவேகத்தாலே பௌத்தமும், சமணமும், மகமதியமும், கிறித்தவமும் தமிழ்நாட்டில் ஒன்றன்

பின் ஒன்றுகக் கலந்து நிலைபெற்றன. என்றாலும் இன்றையவரையும் பண்டைச் சமயங்கள் இரண்டும் நிலை குலையாதிருப்பது ஒருசார் அவற்றின் பெருமையை விளக்குகின்றது.

சங்க காலத்தில் சமயங்கள் இருந்தபோதிலும் அவற்றுக்குள் வேறுபாடு இருந்ததாகக் காணோம். எல்லாச் சமயத்தவரும் ஒன்றிய நெறியில் தமிழ் ஓம்பி வந்தார்கள். என் சமயம் உயர்ந்தது உன் சமயம் தாழ்ந்தது என்று மதவெறி கிளப்பும் மனிதத் தன்மை அற்றவகையில் அவர்கள் அந்தக் காலத்தில் வாழவில்லை. அந்தக் காலம் மனிதன் மனிதனுக வாழ்ந்த காலம். எனவே மதவெறி அவர்களைப் பற்றவில்லை. நால்வேறு வகைப்பட்ட சமயங்களைப் பற்றி வாழ்ந்தபோதிலும் கடைச்சங்க நாளில் மக்கள் மனத்தால் ஒருமையுற்றவர்களாகவே வாழ்ந்தார்கள். ஆனால் கடைச் சங்க இறுதிக்காலத்தில் அந்த உயர்நிலைக்கு இழுக்குப் புகுந்தது. தமிழ் நாட்டில் முதலில் புகுந்த பிறசமயம் பௌத்தமேயாகும். அசோகராலும், அவர்தம் துணைவராலும் இந்திய நாட்டின் பல பகுதிகளிலும் இலங்கையிலும் பரவிய அச்சமயம் தமிழ் நாட்டிலும் கால் கொண்டது. சங்க காலத்துச் சிறந்திருந்த சமயம் அதுவே என்று சொல்லும்படி அவ்வளவு வளர்ந்திருந்தது. பின் அதை ஒட்டிச் சமணம் தமிழ் நாட்டை முற்றுகை யிட்டது. பின் நெடுங்காலம் கழித்து மகமதியமும் கிறிஸ்தவமும் வந்தன.

சங்ககாலத்து வந்த சமணமும் பௌத்தமும், சைவ வைணவ சமயங்களோடு ஒன்றிக் கலந்து அனைத்தும் ஒன்றே எனும்படி வாழ்ந்தன. அவற்றுக்குள் வேறுபாடற்ற வாழ்க்கையைத்தான் சங்க இலக்கியங்கள் நமக்கு விளக்குகின்றன. அத்துடன் ஒருசமயத்தவர் மற்றொரு சமயத்தின் முதன்மையையோ, ஏற்றத்தையோ, சிறப்பையோ இகழ்ந்ததில்லை. சமயவேறுபாடு தமிழ்நாட்டில் முதன் முதன் மணிமேகலையின் 'சமயக்கணக்கர் தம் திறம் கேட்ட காதை'யால் தான் புகுத்தப் பட்டது என்பது அறிஞர் சொல்கை. பிறகு பௌத்தமும் சமணமும்

தம்முட் போர் செய்து ஒன்றை ஒன்று விழுங்கிற்று. ஏறக் குறைய மூன்றும் நூற்றாண்டில் பௌத்தம் தாழ, சமணம் தலை தூக்கிற்று. பின் அதுவும் ஏழாம் நூற்றாண்டில் சைவ சமயக் குரவர்களால் தமிழ் நாட்டில் தாக்கப்பெற்று நிலை குலைந்தது. இன்றும் அவை யிரண்டும் இல்லாத சமயங்களே எனும்படிதான் வாழ்கின்றன.

இனி, சங்க காலத்தே வாழ்ந்த அச்சமயங்களுக் குள்ளே சிறந்ததாகப் போற்றப்பட்ட சமயம் எது என்ப தைக் காண்போம். முன்னே கூறியபடி பாட்டிசைத்த புலவர்கள் எந்தச் சமயத்தைச் சேர்ந்தவர்களாயினும், உயர்ந்த சமயக் கொள்கையைப் போற்றத் தவறுவதில்லை. சமணசமயத்தைச் சேர்ந்த இளங்கோவடிகள் தம் சிலப் பதிகாரத்தே திருமாலையும், முருகனையும் போற்றியமுறை ஒன்றே இவ்வுண்மையை அறியப் போதிய சான்றாகும். ஆய்ச்சியர் குரவையால் அவர் திருமாலைப் பாடும் பாடல் களில் நாலாயிரப் பாடல்களோ, அவற்றின்மேம்பட்டனவோ என்று நினைக்கவேண்டுவது போலன்றோ அமைந்துள்ளன. அதைப் போன்றே அவர் சிவபிரானுக்கும் முருகனுக்கும் ஏற்றம் கொடுக்கும் முறையும் எண்ணற்பாலதாகும். எனவே அச்சமயத்தோரும் அந்நாளில் பிறசமயங்களின் பெருமையையும் முதன்மையையும் மறைக்க எண்ணவில்லை.

சங்ககாலத்தே 'சிவபிரான்' தான் முழுமுதற் கடவு ளாகப் போற்றப் படுகின்றார். சைவமும் வைணமும் தமிழ் நாட்டுப் பழஞ்சமயங்களாயினும் அவை இரண்டினும் சைவத் தலைவனாகிய 'சிவபிரானே' சிறப்புடைக் கடவு ளாகப் பேசப்படுகின்றான். திருமாலும், பிற இந்திரன் போன்ற தெய்வங்களும் திணைநிலத் தெய்வங்களாகப் பேசப் படும் அதே வேளையில் 'சிவபிரான்' எல்லா நிலங்களிலும் உறைந்து, அவற்றிற்கு அப்பாற்பட்டு எங்கும் நிறைந்தவ ராகப் போற்றப் படுகின்றார். காலமும் இடமும் கணக்கும் நீத்த காரணராக அவர் பேசப்படுகின்றார். சைவர்கள் மட்டு மன்றி, பிற சமயத்தவர்களும் சிவபிரானுக்கு ஏற்றம் தந்து பேசுகின்றார்கள்.

மணிமேகலையின் ஆசிரியர் சீத்தலைச் சாத்தனார் பௌத்தசமயத்தவர். பௌத்தசமய வாழ்வுக்கென்றே அந் நூலை யாத்தனர் என்று கூடச்சொல்லலாம். எல்லாச் சமயங் களையும் எண்ணி எண்ணி, இறுதியில் பௌத்தமே ஏற்றது என்று மேகலையார் கண்டதாகக் கூறுகின்றார். அவர் காவிரிப்பூம் பட்டினத்திலுள்ள கடவுளர்களைப் பற்றிக் கூறும் போது சிவபிரானுக்கே முதலிடம் தந்து போற்று கின்றார். விழாவறை காதையில் விழாவுக்கு ஏற்பாடு செய் யச் சொல்லுகின்றார் ஆசிரியர். ஒவ்வொரு சமயத்தவர் களும் செய்யவேண்டிய சிறப்புக்கள் பல. அச் சிறப் புக்கள் தவறாவகையில் விழாவுக்கு வேண்டிய வகையில் விரும்பிச் செய்யுங்கள் என வற்புறுத்துகின்றான் பறையறை வோன். அதில்,

‘ நுதல்விழி நாட்டத்து இறையோன் முதலாப்
பதிவாழ் சதுக்கத்துத் தெய்வம் ஈறா
வேறுவேறு சிறப்பின் வேறுவேறு செய்வினை
ஆறறி மரபின் அறிந்தோர் செய்யுமின் ’

என்று ஆணையிடுகின்றார் ஆசிரியர். புகாரிலே பலதெய் வங்கள் உள்ளன. பல சமயத்தவர் வாழ்கின்றனர். உயர்ந்த கடவுளாக உள்ள ‘ நுதல்விழி இறையோன் ’ தொடங்கி, ஊர் தெய்வங்களாகச் சாதாரண முறையில் அமைந்த இறுதியில் வைத்து எண்ணக்கூடிய ‘ சதுக்கத் தெய்வம் ’ ஈறாகப் பல கடவுளரையும் போற்றி வழியறிந்து போற் றுங்கள் என்ற அறிவுறுத்தல் அது. எனவே முதற்கடவு ளாகிய சிவபிரானும் ஈற்றுக் கடவுளாராகிய சதுக்கப் பூத ருக்கும் இடைப் பட்டவர்களே பிற கடவுளர்கள் என்பது தெரிகின்றது. பின் எச்சமயத்தினும் ஏற்றமுற்றது பௌத்தமே என்று கூறவந்த சாத்தனார், அன்றைய தலை சிறந்த புகாரில் ‘ சிவபிரான் ’ எவ்வாறு முழுமுதற் கடவு ளாகப் போற்றப் பட்டார் என்பதைக் கூறத் தவறவில்லை.

சிலப்பதிகாரத்தும் இளங்கோவடிகள் சிவபிரானுக்கு ஏற்றம் தருகின்றார். அவர்தம் அண்ணன் செங்குட்டுவன்

அக்காலத்துச் சிறந்த மன்னன். சோழரும் பாண்டியரும் பிறரும் அவன் புகழ் பாடினர். அவன் சிறந்த சைவனாக இருந்தான். அவனைச் சிவபிரான் அருளால் பிறந்தவன் என்றே கூறுகின்றார்.

‘செஞ்சடை வானவன் அருளினில் விளங்க
வஞ்சித் தோன்றிய வானவ’

என்பது அவர் வாக்கு. மேலும் அவன் வடநாட்டு யாத்திரைக்குப் போனபோது செய்த வழிபாடு பற்றிக் கூறும் போதும் அவன் சிவனைப் போற்றிய வழியைக் கூறுகின்றார். முதலில் சிவன் அருள் பெற்று, அவனது அழகிய முடியைத் தலையில் தாங்கினான் என்றும், பின்னர் திருமால் அடியைத் தோளில் தாங்கினான் என்றும் கூறுவர்.

‘ஆடக மாடத்து அரிதுயில் அமர்ந்தோன்
சேடங்கொண்டு சிலர்நின்றேத்தத்
தெண்ணீர்க் கரந்த செஞ்சடைக் கடவுள்
வண்ணச் சேவடி மணிமுடி வைத்தலின்
ஆங்கது வாங்கி அணிமணிப் புயத்துத்
தாங்கினர்’

என்றார் அவர். மேலும் குயிலாலுவத்து இறைவனைக் குறிக்கும்போது

‘இமயச் சிமயத்து இருங்குயி லாலுவத்து
உமையொரு பாகத் தொருவனை வணங்கி

என்று குறிப்பிடுவதும் நோக்கற் பாலதாகும். இவற்றைத் தவிர சிவபிரானும் உமையம்மையும் ஆடுகின்ற ஆடல்களையும் ஊழிக் கூத்தினையும் அவர் கூறத் தயங்கவில்லை. ‘பிறவா யாக்கைப் பெரியோ னாக ’ப் போற்றப் படுகின்றான் சிவபிரான். இன்னும் பல வழியிலே சிவபிரானுக்கு ஏற்றம் தரப்படுகிறது அக்காலத்துப் பிற சமயத்தவர்களாலே! எனவே தமிழ் நாட்டில் சங்க காலத்தே பல சமயங்கள் இருந்தபோதிலும் அவற்றுளெல்லாம் சிவபிரானைப் போற்

றும் சைவசமயமே சிறந்ததென்பது தெளிவு பெறுகிறது. இனி அச் சிவனைச் சங்ககாலப் புலவர்கள் எவ்வெவ்வாறு போற்றினார்கள் என்று காணலாம்.

பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்பவன் சங்ககாலப் பெருவேந்தன். வேள்வி பல செய்து வீயாப் புகழ் பெற்றவன். அவன் நிலமிசை நெடிது வாழ்க என வாழ்த்துகின்றார் புலவர் காரிகிழார். அவன் கடவுளை வணங்கின் நலம்பல பெறுவான் என்று வற்புறுத்துகின்றார். அவர் வணங்கச் சொல்லும் கடவுள் சிவபிரானே.

'பணியிய ரத்தைநின் குடையே முனிவர்
முக்கட் செல்வர் நகர்வலம் செயற்கை (புறம்-6)

என்ற அடிகள் அவர் வாக்கு. யார்க்கும் பணியா அவன் குடையும் முடியும் இறைவனுக்கு—முக்கட் செல்வன் நகர் வலம் செய்யும்போது பணியவேண்டும் என்பது அவர் விருப்பம். எனவே பெருமன்னரும் அரும்புலவரும் அச் சங்க காலத்துச் சிவனை முழுமுதற் கடவுளாகப் போற்றி வந்தனர் என்பது தெரிகின்றது.

ஔவையார் என்னும் பெரும்புலவர் தனக்கு நெல்லிக் கனி கொடுத்த அதிகனை வாழ்த்துப் பாடலில் அவனை நெடு நாள் வாழ்வானாக என வாழ்த்துகின்றார். அங்கு அவள் உவமையாக நீலகண்டத்து நேரிழை பாகனைக் கூறும் நிலை அறிந்து போற்றத் தக்கதாகும்.

'பால்புரை பிறைநுதல் பொலிந்த சென்னி
நீலமணி மிடற்று ஒருவன் போல
மன்னுக பெரும நீயே'

என்பது ஔவையாரின் வாக்கு ஆம். நீறு தாங்கிய நெற்றியின் பால் போன்ற தோற்றத்தைக் கூறி, அவனது நீலகண்டத்தையும் நினைந்து, விடம் உண்டு சாவாது என்றும் நிலைபெற்று மக்களை வாழவைக்கும் சிவபிரானது நினைவு ஔவையின் உள்ளத்து நிலைபெற்று விட்டது.

எனவே அச் சிவனைப் போன்றே தன்னை ஆதரித்த அதிகமானும் வாழவேண்டும் என்று அவள் போற்றுகின்றாள்.

கபிலர் சிவபெருமானிடத்து நீங்காத பற்றுக்கொண்ட சங்ககாலப் பெரும்புலவர். அவர் குறிஞ்சி பாடுவதில் வல்லவர். அப்பாடலில் வரும் தலைவன் தலைவி ஆகியோரைத் தக்க வகையில் விளக்கும் தகுதிவாய்ந்தவர். அவர் பாடியது குறிஞ்சிக் கலி. அதில் ஒரு தலைவனது மன நிலையை எண்ணிப் பார்க்கின்றார் கபிலர். தலைவியை வலிந்து கொள்வதன்முன் இரவுக் குறி வந்து வந்து ஏங்கும் தலைவன் நிலையை எண்ணிப் பார்க்கின்றார் கபிலர். அதே நிலையில் இருந்த மற்றொருவன் நினைவும் அவருக்கு வருகின்றது. தலைவியைப் பிரிந்த வாயாவும் வருத்தமும் வாட்டும் நிலையில் தலைவன் இருக்கின்றான். அதே நிலையில் மலையின்கீழ் மண்டியிட்டு,அழுத்தப்பட்டு அவதியுறும் இராவணனும் இருக்கின்றான். அந்த மலையையும் அம் மலைவாழ் சிவனையும் அம்மையையும் செம்மை மொழிகளால் போற்றிப் புகழ்கின்றார் கபிலர்.

'இமையவில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன்
உமைஅமர்ந் துயர்மலை இருந்தன னாக
ஐயிரு தலையின் அரக்கன் கோமான்
தொழப்பொலி தடக்கையின் கீழ்புகுந்து அம்மலை
எடுக்கல் செல்லாது உழப்பவன் போல்' (கலி 38)

என்பது அவர் வாக்கு. உலகம் வாழவேண்டும் என்ற உயர்ந்த கொள்கையில் எல்லோரையும் வாழவைக்கும் செந்தண்மை பூண்ட அந்தணனாகிய சிவபெருமான் உமையொடு கயிலையில் இருக்க இராவணன் மலையெடுக்க முயன்றான் என்று அவர் கூறும் பெருநிலை அனைவரும் போற்றப் படுவதொன்றாகும். இப்படியே எத்தனையோ பெரும் புலவர்கள், சங்க காலத்தில் சிவபிரானுக்கு ஏற்றமும், பெருமையும், முதலிடமும் தந்து போற்றுகின்றனர். வாய்ப்புள்ளபோது பின்னர் அவற்றைப் பற்றி ஆராய்வோம்.

இதுவரைக் கூறியவாற்ருல் சங்க காலத்தே தமிழ் நாட்டில் நான்கு பெருஞ் சமயங்கள் சிறந்துநின்றன என்றும், அவை சைவம், வைணவம், பௌத்தம், சமணம் என்பன என்றும், அவ்வாறு நால்வகைப்பட்ட சமயங்கள் இருந்தபோதிலும் அவற்றுள் வேறுபாடு தோன்றவில்லை என்றும், எச்சமயத்தோரும் பிறசமயத்தானைப் பழிக்காத தோடன்றி, அச்சமயங்களில் உள்ள சிறப்புக்களைப்போற்றத் தவறவில்லை என்றும், அக்காலத்தில் அச்சமயங்களில் எல்லாம் சைவமே சிறந்து நின்றதென்றும், சிவனைச் சங்கப் புலவர்கள் பலகையில் முதலிடம் கொடுத்துப் போற்று கிருர்கள் என்றும் அறிகிறோம்.

---

9. ஒழிபு

வள்ளல் ரெட்டியார் அவர்களின்

மணிவிழா வாழ்த்துப் பா

வாழ்க்கை நன்றே, வாழ்க்கை நன்றே,
ஆக்கை வளம்பெறல் அதனினும் நன்றே,
போக்கில் மதிப்புறல் புவிதனில் நன்றே,
வாழ்க்கையை அதனல் வளம்பெறப் போற்றுதும். 1

நீரின் செழிப்பும் நிலமதன் செழிப்பும்
பாரில் நலமெனப் பலஇனம் விளம்பும் ;
ஊரின் மக்களின் உயர்நிலை அதினும்
சீரும் சிறப்பும் செறிந்தது ஆகும். 2

சுந்தரர் சைவம் சொலிக்க வந்தார்,
சுந்தரம் நிற்கக் கம்பர் கதைத்தார்
எந்தரம் யாதென இயம்புமெய் கண்டார்.
விந்தையை விடுத்தார் வெண்ணெய்நல் லூரில். 3

பண்டைப் பேச்சைப் பகர்ந்திடின் பயனென்,
மண்டை வெடிக்க மதிப்பிடின் யாதோ,

இண்டை சூட்டி இகத்தில் பெருமை
உண்டெனப் பகர உளரெவர் அறிவிரோ ! 4

சடைய வள்ளல் சனித்த நாட்டில்
கொடையைப் பற்றிக் கூறல் உண்டோ ?
இடையில் தோன்றிய தியம்பல் வேண்டாம்
நடையில் உளதை நவிலல் போதும். 5

புலமை போற்றிப் புகழ்விரித் துள்ளோம்
நிலைமை அறிந்து நெறிதனை வாழ்த்துவோம்.
கலையை இளைஞர் காணிட வகுத்தல்
தலைமை அறமாம் தந்தவர் அறிமின். 6

சின்ன சுவாமிச் சீரிய வள்ளல்
முன்னம் செய்த முனைப்புகட் களவிலை.
இன்னம் இயற்றும் எழிற்பணி இயம்ப
என்னைப் போல்வார்க் கியல்பே அன்றோ ? 7

வேளாண் தொழிலில் வெறுமைச் செயல்கள்
காளாண் போலக் கரைந்து போகும்
தாளாண் மையினைத் தாங்கிக் கொண்டு
ஆளாண்மை யினை அதிலவர் விடுத்தார். 8

உழவுப் பெருக்கம் உறுதி அடைய
மழவர் செய்வதை மாற்றி அமைக்க
விழலில் ஒலியென விரையும் யந்திரம்
முழுவின் சிறப்பில் முகந்திட வைத்தார். 9

வாவியின் நீரை வளமுற இறைக்க
ஆவியும் எண்ணெயும் அளவில் இட்டார்.
தாவியும் மின்வலம் தழுவிச் சேர்த்தி
ஏவியும் கொண்டார் எழில்கைத் தொழிலை. 10

உடலுக் குணவை ஊட்டுதல் நன்றே
அடலும் பெறுதற் கறிவும் வேண்டும்
கடலுக் கொக்கும் கவிகளுள் தேர்ந்து
திடலுக் கிடலெனத் தெரிந்தார் சிலநூல். 11

ஆறு பத்தின் அளவிடும் ஆண்டுகள்
ஏறு முகத்தில் எழிலைச் செய்ய
வீறு கொண்ட வியன்கூர் செல்வர்
வேறு எதனை விரும்பிச் செய்யார் ? 12

கோயில் பாலனம் கூறு மிடத்து
வாயில் உரைக்க வரிகள் போதா
ஓய்வில் அமரார் உடனுடன் சீர்மை
தேய்வில் போக்கார் திறமையில் செய்வார். 13

பெரியார் புகழைப் பெருக்கிச் சொல்லல்
உரியார் எவரோ ஊரார் மட்டுமோ ?
சரியாய்க் கூறின் சகத்தோர் எல்லாம்
மரியா தையினில் மதிப்பைத் தருவார். 14

வாழ்க இரெட்டியார், வாழ்க அவர்குடி,
வாழ்க குடும்பமும், வாழ்க அவர்நெறி,
வாழ்க பெண்ணையின் மணலின் பன்னாள்
வாழ்க அவர்செய்யும் வளமைச் சைவமே. 15

கோவைத் தமிழ்க் கழகத்தினேம்

கோவை கிழார் யாத்தது

சித்தாந்தக் கோடைவகுப்பு

கோட்டையூர் புகைவண்டி நிலையத்திலிருந்து இரண்டு கல் தொலைவிலுள்ள கண்டனூர்க்குத் தெற்கே உள்ள வையக்கரை என வழங்கும் இயற்கை வனப்பு வாய்ந்த எழில் மிகு சோலையில் சமாஜக் கோடைவகுப்பு மே 16-ம் நாள் குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் சின்னபட்டம் தெய்வசிகாமணி அருணாசல தேசிக சுவாமிகளால் தொடங்கி வைக்கப்பட்டது. சுவாமிகளால் சிவஞானபோத முதற் சூத்திரம் பாடம் சொல்லப்பட்டது. வகுப்பில்

வித்வான் ஔவை சு. துரைசாமி பிள்ளை, வழக்குரைஞர் கா. இராமனாதன் செட்டியார், திருநெல்வேலி T. R. சிதம்பரம் செட்டியார் ஆகியோர் பாடங்களை நடத்தினார்கள். சமாஜச் செயலாளர் - திரு. க. அரங்கசாமி முதலியார், துணைச் செயலாளர் - திரு. நே. த. கிருஷ்ணசாமி, திருப்புத்தூர்-தாசில்தார் திரு.G. கலியாணம், M.A., Dip.Econ. ஆதியோரும் பங்கு கொண்டனர். சூத்திரம், திருவுந்தியார், சாத்திரம், திருமுறை, பொதுப்பொருள் என்ற தலைப்பில் பாடங்கள் நடந்தன. வகுப்பில் நிரந்தர மாணவ மாணவிகள் பதினெண்மரும், போக்கு வரவில் எழுவரும் இருந்து பயின்றனர். செட்டிமார் நாட்டின் பிரமுகர்கள் பலர் வகுப்பை வந்து பார்வையிட்டுச் சென்றனர். அவர்கட்கெல்லாம் வகுப்பு விடுதியில் உணவு அளிக்கப்பட்டது.

(2) மே 25, 26, 27 நாட்களில் முறையே கண்டனூர், புதுவயல், திருப்புத்தூர் முதலிய இடங்களில் சமாஜச் சார்பில் சமயச் சொற்பொழிவுகள் நடைபெற்றன.

கண்டனூரில் கிராமப் பஞ்சாயத்துச் சபைத் தலைவர் ஸ்ரீ நா. க. செ. அண்ணாமலை செட்டியாரும், புதுவயலில் ஸ்ரீ சரஸ்வதி சங்க அங்கத்தினரும், திருப்புத்தூரில் ஸ்ரீ தாசில்தாரும் பிற சைவாபிமானிகளும் முகமலர்ந்து வரவேற்று விருந்துபசாரம் செய்தனர்.

மே 21-ம் நாள் திருப்பெருந் துறைக்குச் சென்றனர். மறுநாள் காலை திருவாசகமருளிய பெருவாசகனார் சந்நிதியில் கூட்டு வழிபாடும், சித்தாந்த வகுப்பும் நடத்தப்பட்டன. மாலை தேவார, திருவாசக மடத்தில் மணிமொழி வகுப்பு நடந்தது. இங்கு, சமாஜத்தினரை வரவேற்று, 21உ இரவும் 22உ காலை, பகலும், அன்னசத்திரம் சிவயோகாம்பிகை மண்டபத் திருபணியாளர் நேமத்தான் பட்டி உயர்திரு மு. பெ. காசிச் செட்டியார் (இந்தியன் ஓவர்சீஸ் பாங்கி டைரக்டர்) அவர்களும், மாலை திருவாசக மடம், திருக்குளம், நந்தவனத் திருப்பணியாளர் அரிமழம் அன்பு முதிர்ச்சிவநேயத் திருத்தொண்டர் அண்ணாமலை அய்யாவும் நல் விருந்தோம்பினர்.

28-5-51ல் திருக்கொடுங்குன்றம், குன்றக்குடி ஆகிய குறிஞ்சித் தலங்களுக்கு யாத்திரை செய்தனர். இத்தேவாலயங்களின் சொந்தக்காரரான திருவண்ணாமலை ஆதீனத்தார் அன்புகனிந்து வரவேற்று, தேவ தெரிசனமும் செய்து வைத்து, அறுசுவை விருந்துமளித்துச் சமாஜத்தினரைக் கௌரவித்தது போற்றுதற் குகந்தது.

28-5-51-ல் குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனக் கொலுமண்டபத்தில் ஸ்ரீலஸ்ரீ சின்ன மகாசந்நிதானம் பன்னிரெண்டாம் சூத்திரத்தைப் பாடஞ் சொல்லி வகுப்பை முடித்து வைத்தார்கள். சமாஜத்தினர் சிவபுராணம், திருமுறை ஓதிக்கொண்டு, வீதி வலம் வந்து, குன்றை அடைந்து, ஆதீனத்தாரால் இரவு ஸ்ரீகுகப் பெருமானுக்கு விசேட, அபிடேக, அலங்கார, சண்முகார்ச்சனை, ஆராதனைகள் நிகழ்த்தி வைக்கப்பெற்றதைக் கண்டு தரிசித்துக் களிப்புற்றனர்.

வகுப்பிற்கு அன்பளிப்புகள் நல்கிய அனைவர்க்கும், ஆசிரியர்களாய் அமைந்தோர்க்கும், இடம் உதவிய வையக் கருப்பர் அடியார்கட்கும், சாலைகள் செப்பனிட்டு, இடத் துப்புறவும் செய்துதந்த கண்டனூர் பஞ்சாயத்துச் சபையினருக்கும், சமயப் பிரசாரத்திற்கு வரவேற்று விருந்தோம்பிய அன்பர்கட்கும், தலயாத்திரையில் ஆலய வழிபாடுகளுக்கு ஏற்பாடு செய்து, சமாஜத்தினரை அன்போடு வரவேற்றுபசரித்த அத்தனை உத்தமத் திருப்பணியாளர்களுக்கும் நமது சமாஜத்தின் அன்புகலந்த நன்றியை உரியதாக்குகிறோம் !

இந்த ஆண்டு நடந்த கோடை வகுப்பிற்குத் தன்னலம் கருதாது திருத்தொண்டு செய்து வகுப்பின் அமைப்புக்கும் சிறப்பிற்கும் பொறுப்பேற்ற கோட்டையூர் - திரு. டாக்டர் அளகப்பா அண்ணாமலை, M. D. H., Mont. Dip., சாரணப் பேராசிரியர் அவர்கட்குச் சமாஜத்தின் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

—

குன்றக்குடி ஆரூர் அருள்நெறிக்கழகச் சார்பில் 9-8-51ல் சுந்தரர் திருநாள் ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக சுவாமிகள் தலைமையில் நடைபெற்றது.

தூத்துக்குடி சைவசித்தாந்த சபையாரால் சித்தாந்தப் பேராசிரியர் திரு. ௧. சிவகுருநாத பிள்ளையவர்களின் 79ஆம் ஆண்டுப் பிறப்பு நாளையும், நெஞ்சுவிடுதூது பாட நிறைவையும் முன்னிட்டு 5-8-51ல் ஒரு பேரவை கூட்டப்பெற்றது. சாத்தூர் வழக்கறிஞர் சித்தாந்த சிரோன்மணி திரு. T. S. கந்தசாமி முதலியா ரவர்கள் M. A. அப்பேரவைக்குத் தலைமை தாங்கினார்கள். பேரவை சிறப்பாக நிகழ்வுற்றது. திருப்பனந்தாள் ஆதீனகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் பேராசிரியரவர்கட்கு ரூபா நூறு நன்கொடை அனுப்பி யருளியதுடன் நல்லாசித் திருமுகமும் வழங்கியிருப்பதையும், மற்றும் பல பெரியார்கள் வாழ்த்துரைகள் அனுப்பி யிருப்பதையும் தெரிவிக்கப் பட்டன. பேரவையில் இதன் அடியிற்கண்ட வண்ணம் பட்டங்கள் வழங்கப்பெற்றன :—

" சித்தாந்த குருகேந்திரர் " ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக சுவாமிகள், திருவண்ணாமலை ஆதீனம், குன்றக்குடி.

" சித்தாந்த மகாமகோபாத்தியாயர் " ஸ்ரீலஸ்ரீ ஈசான சிவாச்சாரிய சுவாமிகள், பழனி.

" சித்தாந்தச் செந்நாவலர்" திரு. G. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் M.A., B.L., தமிழ்ப் பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

" சித்தாந்தப் புலவர் மாமணி " பாலகவி திரு. வே. இராமநாதன் செட்டியாரவர்கள், தேவகோட்டை.

" சித்தாந்தச் செஞ்ஞாயிறு " திரு. இளவழகனாரவர்கள், ஆசிரியர், மாம்பாக்கம் குருகுலம்.

" சித்தாந்தச் சுடர்மணி " திரு. ஆ. முத்துக்குமாரசாமி பிள்ளையவர்கள், திருவாவடுதுறை ஆதீன சொற்பொழிவாளர், அம்பாசமுத்திரம்.

சமாஜ வெளியீடுகள்

	ரூ.	அ.
பெரியபுராணம்—அகராதியுடன் ...	3	0
நாலாயிரதிவ்ய பிரபந்தம் ...	3	0
சுந்தரர் தேவாரம்—குறிப்புரையுடன் ...	1	0
திருவாசகம், திருக்கோவையார், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு 1 0 திருவாசகம் மூலம் ...	0	4
திருவெம்பாவை திருப்பள்ளியெழுச்சி பொழிப்புரை	0	1
குகார்ச்சனை திருமந்திரம் ...	0	1
திருவாசகத் திரட்டு 6 பை சீவக சிந்தாமணி	1	12
கந்தரநுபூதி (உரையுடன்) 0 2 முருகன் முந்நூல்....	0	3
அப்பர் திரட்டு 6 பை சம்பந்தர் திரட்டு	0	1
திருப்போரூர்ச் சந்நிதிமுறை	0	12
திருவாசகம்-திருச்சதகம் (பண்டிதமணி மு. கதிரேசஞ் செட்டியார் பேருரை ரூ. 8. அங்கத்தினருக்கு	7	0
சித்தாந்த அஷ்டகம் (உரையுடன்) [சிவப்பிரகாசம் (பிற்பகுதி), திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப்பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மைநெறி விளக்கம், சங்கற்பநிராகரணம்]		
துகளறுபோதம் (மூலம்) ...	0	8
சிவஞானபோதம் தமிழ் முதல் நூலே மொழிபெயர்ப்பல்ல. ...	0	2

தபாற்கூலியுள்பட முன்பணம் அனுப்புக. நூல்கள் வி. பி.-யில் அனுப்பப்படமாட்டா.

குறைந்த விலைக்கு விற்பனை

அடியிற் குறித்த ஆண்டுகளின் 'சித்தாந்த' மலர் (12 இதழ்கள்)ஒன்று ஒரு ரூபா வீதமும், முழுமலரல்லா தனி இதழ் ஓர் அணா வீதமும் விற்கப்படும். வேண்டியவர் தபாற் செலவுடன் முன்பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

[மலர் 3 (1930), 4 (1931), 14 (1941), 22 (1949)]

Printed at the Sadhu Press, 15, Ganapathi Mudali Street, Royapettah by V. Rajammal, (P I. Card No. M. S. 115) Edited and Published by C. M. Ramachandran Chettiar, B.A., B.L., for the Saiva Siddhanta Maha Samajam, at 40, Muthiah Mudali Street, Vellala Teynampet, Madras-6, P.I.Card No. M. S. 81.